223

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] யுவ—மார்கழி [பரல்-ரு

## திருவாசகம்

### கோயிற்றிருப்பதிகம்

அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
என்பரமல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனோர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரசே.

பதவுரை :—

முன் ஆய் உம்—(உலகந் தோன்றுதற்கு) முன்னிருந்தவனாகியும்,

பின்பு ஆய் உம்—உலகம் அழிந்த பின்பும் இருப்பவனாகியும்,

முழுதும் ஆய் உம் பரந்த—உலகந் தோன்றுதற்கும் அழிதற்கு மிடையே உள்ள திதிக்காலத்தில் உயிர்ப்பொருள் உயிரில்லாத பொருள் எல்லாவற்றினும் ஊடுருவிக் கலந்துள்ளவனாகியும் நிறைந்து பரந்த,

முத்தனே—(இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் கலந்து நிறைந் திருந்தாலும் அவற்றிற்குரிய மலங்கள் சிறிதுந் தோய்ந்து

மாறுதலடையாமல்) அநாதியே மலநீக்கமுடையவனு யிருக்கின் றவனே

முடிவிலாமுதலே—(பிறப்பும்) இறப்புமில்லாத முதற்பொருளே

தென்பெருந்துறையாய்—தென் திக்கிலுள்ள திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்றவனே

சிவபெருமானே—எல்லா உயிர்களுக்கும் இன்பநலஞ் செய்தருளு கின்ற தலைவனுகிய சிவபெருமானே

சீருடைச் சிவபுரத்தரசே—(எல்லா உலகங்களுக்கும் மேலாய்)ச் சிறப் புடையதாய் விளங்குகிற சிவலோகத்துக்குத் தலைவனுயுள்ள வனே

அடியேன்—சிறியேனுகிய நான்

அன்பினுல்—(உயிர்ப்பற்று, பொருட்பற்றுக்களாகிய உலகப்பற்றுக் களை யெல்லாம் விட்டு உன்னை மட்டும்) பற்றச் செய்கின்ற பேரன்பினுல்

ஆவியோடு ஆக்கை—என் உயிரும் உடம்பும், (உன்வயம் ஒரு வழிப்பட்டு அடங்கி நின்று)

ஆனந்தமாய் கசிந்துருக—பேரின்ப மடைதற்கு எதுவாய் (நீ எனக்குச் செய்தருளிய, காட்டும் உதவியையும், காணும் உதவியையும் எனது உள்ளமானது நினைந்து நெக்கு நெக்காகக்) கசிந் துருகும்படி

என்பரமல்லா இன்னருள் தந்தாய்—என் சார்பு என்னைவிட்டு முற் றும் நீங்கும் வண்ணம் இனிமையாயுள்ள பேருளொளியை எனது உள்ளத்தில் விளங்கச் செய்தாய்

இதற்கு நான் ஓர் கைம்மாறு இலன்—நீ இவ்வாறு அருள்செய்து பேரின்பம் அளித்ததற்கு உனக்கு நான் செய்யக்கூடிய மாற் றுதவி ஒன்றுமில்லை.

விளக்க உரை :—

முன்பு ஆய் உம் பின்பு ஆய் உம்—முன்பு என்ற சொல்லைச் சேர்ந் திருக்கிற ஆய் என்பதனைப் பின்பு என்ற சொல்லோடும்சேர்க்க. ஈரிடத்தும் ஆய் என்பதனை உம் என்பதற்கு முன் வைத்துப் பொருள் கொள்க.

முழுது ஆய் உம்பரந்த முத்தனே—முழுதும் ஆய் என்ற சொற்றொடரை முழுது உம் ஆய் எனப் பிரித்து முழுது ஆய்உம் என உரைநடை செய்க.

முழுது ஆகியும் பரத்தல் என்பது உலகமுற்றிலும் அணுவில் அணுவாய் அண்டத்தில் அண்டமாய் எள்ளுக்குள் எண்ணெய்போல உயிர்க்குயிராய் எங்கும் ஊடுருவி நிறைந்து வீற்றிருத்தல். அவ்வாறு இறைவன் உலகில் நிறைந்திருக்காவிட்டால் உயிர்களுக்கு அவன் கருதும் இன்ப நலம் உண்டாகமாட்டாது. இறைவன் அவ்வாறு எல்லாப் பொருள்களிலும் கலந்து நிறைந்திருப்பினும் அவற்ருல் அவன் தொடக்குண்ணுதும் அவற்றைக் கடந்துமிருத்தல்பற்றி அடிகள் இறைவனை முத்தனே என்று விளித்துக் கூறினர். முழுது ஆயும் பரந்த முத்தனே என்பதற்கு முழுது ஆகியும் பரந்திருப்பினும் முத்தனே எனப் பொருள் கொள்க.

முடிவிலா முதலே—முடிவு - அழிவு, இறுதி; இனம்பற்றிப் பிறப்புமில்லாதவன் எனக் கொள்க. முதல்=முதற்பொருள். எல்லாப் பொருள்களும் அழிப்புக்காலத்தி லொடுங்குதற்கும் படைப்புக் காலத்தில் தோன்றுதற்கும் காரணப்பொருளாய் இருத்தலின் இறைவன் முதற்பொருளாய் இருக்கின்ருன் என்று அடிகள் கூறினர். "பிறப்பும் இறப்பும் இல்லாத முதற்பொருளாய் நீ இருத்தலால் பிறப்பிறப்புக்களுடையவனுய் இருந்த என்னைப் பிறப்பு இறப்புக்களினின்று நீக்கி, ஆண்டு பேரின்பம் அருள் செய்தாய்" என்று குறிப்பிப்பாராகிய அடிகள் (பிறப்பு) முடிவிலாமுதலே என்று இறைவனை விளித்தார்.

தென் பெருந்துறையாய்—அடிகள் தமக்கு இறைவன் அடியார்களுடன் திருப்பெருந்துறைக்கு அந்தணன் வடிவில் வந்து ஆண்டு அருள்செய்ததை நினைந்து தென் பெருந்துறையாய் என்ருர்.

சிவபுரத்து அரசே—இறைவன் சிவபுரத்திலிருந்து திருப்பெருந்துறைக்கு வந்து ஆண்டவன் என்னும் நிலையில் தம்மை அடிமையாகக் கொண்டு அருள்செய்தான் என்று குறிப்பிப்பான் அடிகள் சிவபுரத்து அரசே என்று கூறினர். அச்சிவபுரமானது சத்திநிபாத நிலை அடைந்த அடியார்கள் பேரின்ப நலம் நுகரும் இடமாதலால் அதனை அடிகள் சீருடைச் சிவபுரம் என்ருர்.

அன்பினால்—இங்கே அன்பு என்பது பிறிதொன்றும் வேண்டாது இறைவனுடைய திருவடிகளையே பற்றச்செய்யும் அயராப் பேரன்பு ஆகும். இறைவன் எல்லா உயிர்களும் தன்னை அடைந்து இன்ப நலம் பெறுதல் வேண்டும் என்ற அன்புடையவனாதலின் ஒருவர் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செய்தாலன்றி இந்த அயராத பேரன்பை அடைதல் முடியாது. இறைவன், தமக்குச் செய்கிற அருள் விளக்கத்தினால் ஒருவர் தமக்கும் உயிர்களுக்கும் உள்ள வேற்றுமையினின்று முற்றிலும் நீங்கி இந்த வியாபக அன்பை அடைதலின் அது அருள் அன்பு ஆகும். இந்த அன்பே பேரா இயற்கைப் பேரின்ப மடைவதற்கு ஏதுவா யுள்ளது.

அடியேன்—கிடைத்தற்கு அரிய பேரின்பமானது "யாவர்க்குங் கீழாமடியேனுக்கு யாவருக்கும் மேலா மளவிலாச் சீருடைய இறைவனாலே" தமக்கு கிடைத்தது என்று குறிப்பிப்பார் தம்மை 'அடியேன்' என்று கூறினார்.

ஆவியோடு ஆக்கை—உடல் ஐம்பொறி வயப்பட்டு ஐம்புலன் வழியே செல்லுதலும் உயிர் இறைவனை நோக்கி அவன் வழிச்செல்லுதலு மின்றித் தம் உயிரும் உடலும் ஒருவழிப் பட்டனவாகி இறைவனையே நினைந்து கசிந்துருகின என்று பொருள்படுதற்கு அடிகள் ஆவியோடு ஆக்கை என்றார். அவ்வாறு கசிந்து உருகுதலில் உயிரும் உடம்பும் ஒருவழிப்பட்டனவாயும் உயிரில்லாத உடல் உயிரின் கண்ணொடுங்கி அதன் ஏவல் செய்ய நின்றது என்பதைக் குறித்தற்கும் வீடுபேற்றின் காலத்தில் உடலை ஆக்குகின்ற தத்துவங்கள் முதலியன உயிரிலடங்கி அவ்வாறு தன்னில் தத்துவ முதலிய பாசங்களடங்கிய உயிர் அருட்பேரொளியில் அடங்குகின்றது என்பதைக் குறித்தற்கும் அடிகள் ஆக்கையோடு ஆவி என்னாது ஆவியோடு ஆக்கை என்று கூறினார்.

என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்—பரம் என்ற சொல் இங்கே பக்கம் அதாவது சார்பு என்னும் பொருள்பட நின்றது. 'அல்லா' என்பதில் 'து' விகுதி தொக்கி நின்றது. "என்பரம் அல்லா இன்னருள்" என்ற சொற்றொடர் என்பரம் அல்லாது இருத்தற்குக் காரணமாயுள்ள இன்னருள் என விரியும். அதாவது, உலகத்தைச் சாராது உன்னையே சார்ந்திருத்தற்குக் காரணமாயுள்ள இனிய அருள். என் அறிவு வேட்கை செயல்கள் எனது சார்பி லிரா

மல் எங்கும் நிறைந்து இருக்கிற உன்னுடைய அறிவு வேட்கை செயல்களுக்குள் தன்முனைப்பு சிறிதுமின்றி அடங்கி இருக்கச் செய்கின்ற இனிய அருள் என்பது பொருள். எப்பொழுதும் அருள் உயிர்களுக்கு இன்ப நலத்தையே செய்தலால் அதனை இன்அருள் என்றார்.

இன்அருள் தந்தாய்—என்பது இன்றெனக்கருளி என்ற முதற்குறிப் புப் பாட்டில் அடிகள் கூறியபடி எனது உள்ளத்தில் அதன்கண் ணுள்ள மலஇருள் முற்றிலும் நீங்கும்படி இனிய அருட்பேரொளி விளங்கச் செய்தாய் என்று பொருள்படும். கோயிற்றிருப்பதிகம் கடைசிப் பாட்டில் 'தந்தது உன்றன்னை' என்று அடிகள் கூறி இருத்தல் காண்க.

யான் இதற்கு ஓர் கைம்மாறு இலன்—(மாயா தத்துவங்கள் எல்லாம் அடங்கி நான் உன்னிடம் அடங்கியிருக்கும் உண்மை நிலையில்) தாம் யாதொரு கைம்மாறும் இறைவனுக்குச் செய்யமுடியாது என்று அடிகள் கூறினர்.

அடிகள் அனுபோக இலக்கணம் கூறுகிற கோயிற் றிருப்பதிகம் "இன்றெனக் கருளி" என்னும் முதற்குறிப்புடைய ஏழாவது பாட் டிற் கூறுகிறபடியே அதே பதிகம் இரண்டாவது பாட்டாகிய இந்தப் பாட்டிலும் மலநீக்கத்தா லுண்டாகும் (1) அறிவு நிலையும், அருள் விளக்கத்தா லுண்டாகும் (2) அன்பு நிலையும், இன்ப விளக்கத்தா லுண்டாகும் (3) செயல் நிலையும் ஆகிய மூவகைச் சிறப்பு இயல்பு அத்துவித அநுபோக நிலைகளையும் கூறி அருளினர். ஆனல் அந்தப் பாட்டிற் கூறப்பட்ட முதலாவது நிலையை இந்தப் பாட்டில் மூன்றாவ தாகவும், இரண்டாவது நிலையை இந்தப் பாட்டில் முதலாவதாகவும் மூவகை நிலைகளுக்குமுரிய ஏதுவும் பயனும் ஆகிய முறைமைக்கு மாறின்றி அடிகள் கூறினர்.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---

## சென்னை மாகாணத் தமிழர் இரண்டாவது மகாநாடு

# திருநெல்வேலி.

தலைவர்

திருவாளர் வி. நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் M. L. C.,

நிகழ்த்திய

# தலைமைப்பேருரை.

---

மருந்தவை மந்திரம் மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் [துன்றுபைம்பூஞ்
செந்திசெம் பொன்மலர் திருநெல்வே லியுறை செல்வர்தாமே.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்.
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்தோனை விளங்கு வள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவாத வர்க்கொரு தாழ்வில்லையே.

அறிவும் ஆற்றலும் வாய்ந்த ஆன்றோர்களே!
தமிழ்த்தாயின் மீது பேரன்பு பூண்டொழுகும் பெரியோர்களே!!
சகோதரி, சகோதரர்களே! அனைவர்க்கும் என் வந்தனம்.

எந்நாட்டிலும் முன்னுடெனப் போற்றும் இத் தென்னாட்டின் கண் உள்ள சிவத் தலங்கள் பலவற்றுள்ளும் ஒப்புயர் வில்லாது விளங்குவதும், திருஞான சம்பந்தப் பெருமானால் தேவாரத் தீந் தமிழ்ப் பதிகம் பெற்றுப் பெருஞ் சிறப் பெய்தியதும், முருக வேளின் திருவருள் பெற்ற அருணகிரியாரால் உலகினர் உய்வான் வேண்டிப் பாடிய திருப்புகழ் வண்ணங்களையுடையதும், புனிதமிக்க தாமிரபரணி நதியால் சூழப் பெற்றதும், பாண்டிய நாட்டிற்கும் தமிழிற்கும் புத்துயிர் அளித்த பெருமை யுடையதும், அன்பர்கள் நினைத்தமாத்திரத்தால் முத்தி இன்பத்தை அளிக்க வல்லதும், பவக் கடல் கடக்கத் தவக்கலம் நடத்துவோர் முத்திக்கரையை முன்னுற வேண்டி, எத்திக்கினும் பார்த்து மருண்டிராது, முத்திக்கரை யிதுவாமெனக் காட்டும் கலங்கரை விளக்கமாக விளங்குவதும்,

தமிழ்த்தாயின் பிறப்பிடமாகக் கூறப்பெறும் அகத்திய முனிவர் தவப்பெரும் மலையாகிய பொதியிலைத் தன்னதாக்கொண்டிருப் பதும், மக்கட்கு என்றும் இடையறா இன்பத்தை அளிக்கும் நீர் அருவிகளாலும் அழகிய மலர்ச் சோலைகளாலும் இத்தகைய பல் வேறு வளங்களாலும் சிறப்புறப் பெற்றதும், நீர் நிறைந்த தாமரைத் தடாகங்களாலும் பொய்கைகளாலும் படிந்தவர் குற்றமகற்றும் பல் பெரும் தீர்த்தங்களாலும் குறிஞ்சி முதலிய ஐந்திணை வளங்களாலும் பார்ப்பவர் கண்களைக் கவரும் காட்சியை உடையதாகியதும், மாட கூடங்கள், தெற்றிவரிசைகள் நிறைந்து அழகினைச் செய்வதும், காந்திமதி யம்மையை இடமாகக் கொண்ட நெல்லையப்பர் அமர்ந்த திருக்கோட்டம் வானுற வோங்கி மாண்புறத் திகழ்வதும், தொண்டர் கள், அறவோர் முதலியவர்களுக்கு அன்னம் ஆர்விக்கும் அறச் சாலைகள் அணிபெற நிலவப் பெற்றதும், கற்போர் இன்புறும் கல்விச் சாலைகள் கவினுற வோங்கப் பெற்றதும், அவநெறி நீக்கிச் சிவநெறியளிக்கும் அன்பர் மடங்கள் செறியப் பெற்றதும், நாதாந்த மாக்கிப் போதாந்த மளிக்கும் வேதாந்த சித்தாந்தத் திருமடங்கள் விளங்கப் பெற்றதும், தமிழ்த்தாயைப் போற்றிப் பாதுகாத்து நீங்காப் புகழ்பெற்று நின்று நிலவுகின்ற தமிழ்ச் சங்கம் கவினப் பெற்றதும், இன்னோரன்ன பல சிறப்புக்களை யுடையதுமான இத் திருநெல்வேலியில், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் மொழிக்கும், அம்மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழருக்கும், இடையறாது அரிய தொண்டினை ஆற்றி வருகின்ற இத் தமிழ்ச்சங்கத்தின் இவ்வாண்டுவிழாவிற்குக் கல்வி, கேள்விகளில் மிகவும் இளையேனாகிய என்னைத் தலைமை தாங்கப் பணித்தமை சிறி யேன்கண் இச் சங்கத்தினர் கொண்டுள்ள பேரன்பின் பெருக்கி னையே காட்டுவதாகும்.

அன்பரீர்! இத் தமிழ்ச் சங்கத்தின் முதற் காரணமாக நின்ற சென்னை மாகாணத் தமிழர் மகாநாட்டின் முதலாம் ஆண்டு விழாவில் நந்தமிழ் மொழியிலும் அரசியல் மொழியாம் ஆங்கிலத்திலும் சட்டப் புலமையிலும் நிறைந்த அறிவு, ஆற்றல், வண்மை, வாய்மை, எடுத்துக் கொண்ட காரியத்தைத் திறமையாக முடித்தல், பக்தி முதலிய உயர்ந்த குணங்களிலும் செயல்களிலும் சிறப்புற்று விளங்குவாரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், செந்தமிழ்ப் புரவலரும், ஆகிய இராவ்சாகிப் திரு த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் தலைமையுரையினை அன்புடன் கேட்டு மகிழ்ந்தீர்கள். இச்சங்க ஆண்டு விழாவில் ஆண்டிலும் அறிவிலும் இளையேனாகிய யான், தலைமை தாங்கி என்ன பேருரையை நிகழ்த்தப் போகின்றேன்? ஏதோ, தலைவர் என்பார்க்கு உரிய கடமையின்படி, எனக்குத் தோன்றும் சிலவற்றைக் கூறுகின்றேன்.

அன்பர்களே! இப்பெருமையை எனக்கு அளித்த பெரியா ராகிய உங்களுக்கு என் என்றும் மறவாத நன்றியறிதலையும் வந்த னத்தையும் தெரிவித்துக் கொண்டு மேற்செல்லுகின்றேன்.

**மெய்யன்பர்களே!** மக்கள் முன்னேற்றத்திற்கு உரிய முதன்மையான காரணம், மொழியின் முன்னேற்றமே என்பது உலகத்தார் கண்டறிந்த உண்மையாகும். மேனுடுகளும் ஜப்பானும் முன்னேற்றமடைந்த காரணம் அந்நாட்டினர் தங்கள் தங்கள் மொழிகளை வளப்படுத்திக் கொண்டு, அவற்றின் பயிற்சியால் தாங்கள் முன்னேற்றமடைந்ததேயாகுமன்றோ! எந்தமொழி, மக்கள் தொடங்கிய கால முதலாக அவர்கள் பேச்சு வழக்கிற்கு ஏற்றதாகிய தொன்மை பெற்றுளதோ, எது இடையருது என்றுமுள்ள மொழியாக வுள்ளதோ, எது சிறந்த இலக்கிய இலக்கணச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளதோ, எது பிறமொழியிலுள்ள எல்லாக்கலைகளையும் ஏற்றுக்கொள்ள இடம் தருவதாக உள்ளதோ, எது மக்கள் வாழ்வின் முடிந்த பயனுக உள்ள அறம் பொருள் இன்பம் வீடுகளைப் பெறச் சாதனமாக உள்ளதோ, எது தெய்வத்தன்மை வாய்ந்ததாக உள்ளதோ, அந்த மொழியே மொழிகட்கெல்லாம் முதன்மைபெறும் உயர்தனிச் செம்மொழியாகும். இங்ஙனமாகிய சிறப்புக்களை யெல்லாம் ஒருங்கு கொண்டது நம் தெய்வச் செந்தமிழாகும் என்பது புனைந்துரைக்கும் புகழ்ச்சியுரையாகாது.

நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியில், **தொல்காப்பியம்** என்பது இப்பொழுதுள்ள இலக்கணங்களிலெல்லாம் மிகப்பழைய இலக்கணமாகும். இதுதோன்றி ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகள் ஆயின என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்தப் பழைய நூலாசிரியரோ, தமக்குமுன் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பிருந்த பழைய இலக்கண நூலாசிரியர்களைத் தமது நூலில் ஆங்காங்குக் குறிக்கின்றனர்; 'தோலெென மொழிப **தொன்மொழிப் புலவர்**' என்றெல்லாம் கூறுகின்றனர். இதனுல் தமிழ் மொழியிலுள்ள இலக்கணங்களின் பழைமையை யாவரே எண்ணியறியவல்லார்! **அன்பர்களே!** சிறந்த இலக்கணங்கள், ஒரு மொழியில் தோன்ற வேண்டுமாயின், அம்மொழியில், அதற்குமுன் பல ஆண்டுகளாகவே, சிறந்த இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும்.

'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்' என்பர். அங்ஙனமே ஒரு மொழியில் சிறந்த இலக்கியம் தோன்றவேண்டின், அம்மொழி தோன்றி எத்தனையோ ஆண்டுகள் கடந்திருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் நோக்கின், நமது மொழி, படைப்புக்காலம் தொடங்கியே இருக்கும் ஒரு அநாதிமொழிஎன்பதற்குத்தடையென்ன? இவ்வளவு காலமாக மக்கள் வழக்கில் இருந்து வந்தும், நம் மொழி, இது காறும் ஒரு சிறு தளர்ச்சியும் உருது, கன்னித்தமிழாகவேயிருத்தலின், இது, இந்த உலகம் உள்ளளவும் அழியாது நிலவும் எனற்கும் தடையென்ன? இங்ஙனம் நமது தமிழ்மொழி நமது சிவபெருமானைப்போல என்றும் உளதாயிருத்தலினன்றோ, இதனை, '**என்றுமுள தென்றமிழ்**' என்று கவிச்சக்ரவர்த்தி கூறுவாராயினர். இனி, நமது மொழியின் இலக்கணச் சிறப்பினை எடுத்துரைக்க யாவரால் இயலும்? பிறமொழிகளின் இலக்கண மெல்லாம் எழுத்து, சொல், யாப்பு,

அணி—என்றிவைகளுக்கு இலக்கணம் கூறிச்செல்லும் நம் தமிழ் மொழியோ, அவற்றோடு பொருளிலக்கணம் எனும் ஒன்றையும் சிறப்பாகப் பெற்றுளது. இலக்கண நூல்களின் பயன், சொல்லை மாத்திரமன்றி, மொழியை மாத்திரமன்றி, மக்களின் ஒழுகலாற்றினையும் வரையறுப்பதேன்பது, நம் தமிழ்மொழியாலேயே கண்டறியப்படுவது. மக்கள் ஒழுகலாற்றினை, அஃதாவது, வாழ்க்கை நெறியினை, அகம் என்றும் புறம் என்றும் வரையறுத்துக் கூறுவதே, தமிழ் இலக்கணத்திலுள்ள பொருளதிகாரமாகும். இலக்கணத்தின் முக்கியமான பயனே பொருளதிகாரத்தால் கூறப்பெறும் அகம் புறம் எனும் வாழ்க்கை நெறிகளை வரையறுப்பதே யாகும் என்பதனை, "எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே" என்று கூறும் இறையனாரகப் பொருளுரையால் அறியலாகும். இம்மட்டோ, மக்கள் வாழ்க்கையின் பயன், வீட்டுலகம் அடைதலேயாகலின், அதனையே வலியுறுத்திக் கூறுவதும் நம் தமிழ் இலக்கணமேயாகும். உள்ளத்து உறவு பூண்ட தலைவன் தலைவியென்பவர்கள், இல்லறம் நடத்தி, பின்பு நிலையாமையுணர்ந்து, உள்ளத் துறவும் பூண்டு, வீடு பெறும் நெறியையடைதல் வேண்டும் என்னும் உண்மை,

> "காமஞ் சான்ற கடைக்கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் வற்புறுத்தப் பெறுதல் காண்க. இங்ஙனமாகிய இத்தொல்காப்பியத்திற்கு இணையாய் இலக்கண நூல் வேறு எம்மொழியில் உளது? இவ்வாறு பலவாய தமிழ் இலக்கண நூல்களின் பெருமையை யெல்லாம் எடுத்துக்கூற என்னால் இயலாது. இங்குள்ள புலவர்கள் கூறல் வேண்டும். இயல், இசை, நாடக மாண்புகளை முற்ற ஆராய்ந்து இலக்கணங் கூறியதனால், 'முத்தமிழ்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது, நம் அரும்பெறல் அமிழ்தமாகிய தமிழேயன்றோ!

அன்பர்களே! இனி நம் தமிழ் மொழியிலுள்ள இலக்கியச் சிறப்புக்களை எடுத்துரைப்பின், அதுவே தனி விரிவுரையாகும். அவற்றையெல்லாம் எடுத்துரைக்க வல்லார் மேற்கூறியபடி இங்குள்ள புலவர்களேயாவார். சுருங்கக்கூறின், சங்ககாலத்து நல்லிசைப் புலவர்கள் அருளிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலாய எண்ணரும் சங்க இலக்கியங்களும், விண்ணகம் போற்றும் கண்ணகியின் கற்புமாண்பை விரித்துக் கூறும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலாக உள்ள ஐம்பெரும் காப்பியங்களும், கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், சேக்கிழார் முதலியோர் பாடியருளிய தீந்தமிழ் நூல்களும் தமிழ் மக்களாகப் பிறந்தோர் ஒவ்வொருவரும் கற்றுக் கேட்டுப் பருகவேண்டிய மண்ணக அமிழ்தமல்லவா?

உலக மெங்கணும் சிறப்புற்று நிற்பது, திருவள்ளுவ ரியற்றிய தமிழ்மறை என்பது யாவர்தா னறியார்? இது நிகர்க்குஞ் செவ்விய நூலினை, வேறு எம்மொழி யாயினும் பெற்ற பெருமையுடைத் தாயிற்றோ? பொய்யில் பொருளைத் தன்னகங்கொண்டு பொலிவதனு லன்றோ, மேல் நாட்டிலுள்ளவர்களும், கீழ்நாட்டி லுள்ளவர்களும், தத்தம் மொழிகளில் இதனை மொழிபெயர்த்துக் கற்று இன்புறலாயினர். இத்திருக்குறள், இருபத்தெட்டு மொழிகளுக்குமேல் இது காறும் மொழிபெயர்க்கப்பட்டதுபோன்று, வேறு எம்மொழியிலுள்ள எந்நூலாவது மொழிபெயர்த்துக் கற்கப்படும் தகுதியுடையதாக விருக்கின்றதா? இந்நூலின் அருமையை அறிந்தன்றோ, டாக்டர் G. U. போப் முதலிய ஆங்கிலப் புலவர்கள், இதற்கிணையாகும் மெய்ந் நூலொன்றை, எம்மொழியினும் காண்பதரிது எனக்கூறிப் போற்றலாயினர். மேலும், இத்தமிழ் மறையினைத் தங்கள் வேதம்போலவே வைத்துப் போற்றுவாரு மாயினர். இந்நூல், தன்னைக் கற்பவர் மனத்தையும், கேட்பவர் செவியையும், பகர்வோர் வாயையும், இன் புறுத்துவதன்றித் தொடர்ந்து துன்புறுத்துகின்ற இருவினைகளும் இரிய ஈர்க்கும் அரிய மருந்து மாகுமென்று புலவர் பறைசாற்று கின்றனர். இவ்வரிய தமிழ் மறையைத் தமிழ் நாட்டிலுள்ள தமிழர் களில் எத்துணைப்பேர் படித்து இன்ப மெய்துகின்றனர்? அங்ஙனம் கற்று இன்புறாமை நம் நாட்டின் தவக்குறையே யன்றோ?

இத்தகைய தமிழ் இலக்கியங்களன்றோ, நம் முன்னோர் களாகிய சமயகுரவர்கள், தொண்டர்கள், புலவர்கள், மன்னர்கள், பொதுமக்கள் ஆகிய இவர்களது பத்திநெறி, புலமைத் திறமை, ஆட்சித் திறமை, வாழ்க்கை வரலாறு, நாடு, நகரச் சிறப்பு, வள் ளன்மை, வீரம் முதலாயவற்றை நாம் அறிந்து மகிழச் செய்வன. திருக்குறள், நாலடியார் முதலாகிய அறநூல் நீதி நூல்களா லன்றோ, நாம், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இவற்றின் இயல்பும், இவைகளைப் பெறும் நெறியும் அறிகின்றோம். இனி நமது மனத்தை உருக்கி எல்லாம் வல்ல இறைவன் திருவடியைச் சேர்ப்பிக்கும் தோத்திரங்களாகிய பக்தி நூல்கள், நம் தமிழ்மொழியில் இல்லாதன வேறு எங்குள்ளன? தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம் முதலிய பத்திச் சுவைகள் மலிந்த தோத்திர நூல்கள், அவற்றை ஓதும் மக்களை மட்டுமா உள்ளங் கனிவிக்கின்றன? அவற்றைக் கேட் டருளும் மூர்த்திகளையும் உருகச் செய்து ஆட்டுவித்தன அல்லவா?

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்டபாலனை யழைத்தது மென்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

என வரும் இவ்வரிய பாசுரத்தினால், சமயகுரவர்கள் மூவரும், தாம் அருளிய தேவாரத் தீந்தமிழ்ப் பதிகங்களினால், தமிழ்மொழி முத் தொழின்மையினையும் நடாத்தும் ஆற்றலுள்ள தென்பதை மெய்ப்பிக்

கின்றனர் என அறிகின்றோம் அல்லவா? நம் நாட்டில் வழங்கும் மொழிகளில், வேறு எம்மொழி, எல்லாம் வல்ல இறைவனை மேற் கூறியபடி தூதுபோகத் தூண்டியது? அங்ஙன மெல்லாம் செய்தது நம் பைந்தமிழன்றோ! இங்ஙனம் இறைவனையும் ஆட்டிவைக்கும் இறைமையினால் தலைசிறந்து நின்றது நமது உயர்தனிச் செம்மொழி யன்றோ! இன்னும் நீர்வற்றிய குளத்தில் நீரையும், அதன்பால் முன்னிருந்த முதலையையும், அம்முதலை வயிற்றிலிருந்து உரிய வயதுவரை வளர்ந்த பிள்ளையையும் அழைப்பித்துத் தந்தது நம் தீந் தமிழன்றோ! சிவநேசச் செல்வராகிய வணிகர் பெருமானார் சேமித்து வைத்த என்பினை, "மட்டிட்ட புன்னையங்கானல்" என்ற இன் னிசைத் தீந்தமிழன்றோ பெண்ணுருவாக்கியது! ஒரு நாவால் உரை செயற்கரிய உயர்வினைப் பெற்ற திருநாவுக்கரச ரோதிய "பண்ணி னேர் மொழியாளுமை பங்கரோ" என்ற பண்ணிசைப் பதிகமன்றோ, கண்பெறு பயனையடையப் பண்புடைக் கதவைத் திறக்கப்பண்ணி யது! மணிவாசகனார் அருளிய திருவாசகம், கோவையார் இவைகள், தீந்தமிழின் இனிமையைத் தெரிக்கும் தெய்வ நன்மொழிக ளென் பதை யாவரறியார்? மேல்நாடுகளில் வானசாத்திர விற்பன்னர்கள் எழுதிய பல பெரிய நூல்களிலுள்ள தத்துவங்கள், திருவாசகத்தில் திருவண்டப் பகுதியென்ற பாசுரத்தின் மூலமாக அறியக்கிடக் கின்றன வன்றோ!

தொல்காப்பியர் "மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்" என்று கூறியவாறு, நம் தமிழ் மொழியில், மந்திர நூல்களும் பிறவும் இருந் தனவே! இனி, இங்ஙனமாகிய சிறந்த நூல்களைத் தோற்றுவித்த நல்லிசைப் புலவர்களோ எண்ணிறந்தவர்கள் ஆவர். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் முதலாய தெய்வங்களே, புலவர்களாகிச் சங்கம் வீற்றிருந்த சிறப்புடைய தன்றோ நம் தமிழ் மொழி! பண்டைக்காலந் தொட்டு இத் தமிழ் நாட்டை யாண்டு வந்த மூவேந்தரும், குறுநில மன்னரும், வள்ளல் களும், பிறரும் புலவரைப் போற்றித் தமிழை வளர்த்து வந்தார்கள். அதனால், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, காளமேகம், ஔவை முதலிய தமிழ்ப் புலவர்கள் தோன்றிக் கம்ப ராமாயணம் முதலிய அரிய நூல்களையும் தனிச் செய்யுட்களையும் இயற்றித் தமிழிற்குத் தொண்டு செய்த வரலாறுகள் அளவிடற்பாலன வாமா? இதுகாறும் கூறியவற்றால் பண்டைத் தமிழர்களாலும், தமிழ்ப் புலவர்களாலும், அவர்கள் இயற்றிய நூல்களினாலும் தமிழின் பல்வகைப் பெருமையையும் அதனால் தமிழ்நாட்டின் உயர்வையும் ஒருவாறு அறிந்தோம்.

அன்பர்காள்! பண்டைக்காலத்தே யிருந்த நம் தாய் மொழி யின் உயர்தரக் கல்வியின் பெருமையினைப் பாருங்கள். அக்காலத்தே இக்காலத்துள்ள பள்ளிக்கூடங்கள் (Schools) கல்லூரிகள் (Colleges) முதலியன இருந்தனவாகக் காணமுடியவில்லை. ஆசிரிய மாணவ பரம்பரையாகவும், ஏட்டுச் சுவடிகள் வாயிலாகவும் பயிலப்பட்டு

வந்ததாகவே அறியப்படுகின்றது. இக்காலத்தோ பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், வகுப்புகள், பரீட்சைகள் முதலாய நெறிகளுடன் எளிதிற் கிடைக்கும் புத்தகங்கள் வாயிலாக நிகழும் கல்வி வசதிகள் மிகப்பலவாகுமே! "பொருள் நனி கொடுப்போன்" "வழிபடுவோன்" என்று இன்னவரேயன்றி, எல்லோர்க்கு மிப்போது உண்டிச்சாலை முதலிய வமைத்தும் கல்வி கற்பிக்கப்படுகின்றதே. என்றாலும், பண்டைக் காலத்தேபோல் பற்பல சிறந்த புலவர்கள் இப்போது தோன்றாமைக்குக் காரணம் என்ன?

பண்டைக் காலத்தே, ஆசிரியரும் அவரைச் சார்ந்த சில மாணவருமாகப் பயிலப்பட்டுவரினும், அத்தகைய பயிற்சி, ஊர் ஊராக, நாடு நாடாக, எங்கெங்கும் பரவியிருந்தது. சிறந்த ஆசிரியர்களில்லாத ஊரும், அவர்பாற் கல்வி பயிலாத மாணவரும், கல்வி பயிலாத காலமும் இருந்தில. இப்போதோ உயர்தரக் கல்லூரிகள் இருக்குமிடங்களோ, மிகச் சில. இச் சென்னை மாகாணத்திற்கே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தைச் சார்ந்த திருவையாற்று அரசர் கல்லூரியிலுமே, தனித் தமிழ் வித்துவான் உயர்தரக் கல்விகள் பயிலப் பெறுகின்றன. தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரது பெரு முயற்சியால், அச்சங்கத்தே அண்மையில் ஒரு தனித் தமிழ் வித்துவான் கல்லூரி தொடங்கப்படுமெனவும், தமிழ் மொழியும் சைவ உலகமும் செய்த தவப்பயனாக அவதரித்திருக்கும் திருப்பாதிரிப்புலியூர், ஸ்ரீ ஞானியார் மடாலயத் தலைவர்களாகிய சுவாமிகளது நன் முயற்சியால், அங்கு ஒரு தனித்தமிழ் வித்துவான் வகுப்புக் கல்லூரி தொடங்கப் பெறுமெனவும் அறிந்து மகிழ்கின்றேன்.

தனித்தமிழ் வித்வான் பயிற்சி பரவுவதற்கு ஒரு முக்கியமான காரணமாக விருப்பது மற்றொன்றாகும். அது, திருப்பனந்தாள் மடாதிபதிகளாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் தனித்தமிழ் வித்துவான் பரீட்சையில் முதன்மையில் தேர்ச்சியுற்றவர்கட்கு ஆயிர ரூபா பரிசு ஏற்படுத்தியிருப்பதாகும். தமிழ்த்தாயின் புதல்வர்களில் நம் சுவாமிகள் தலைசிறந்தவர்களன்றோ!

இங்ஙனம் இம்மாகாணம் முழுவதற்கும் இரண்டொரு கல்லூரிகள் போதியனவாகுமா? பொருளுடையோரெல்லாரும் ஆங்கிலக் கல்வியின் ஆசைமேலீட்டால், தம் மக்களை ஆங்கிலக் கல்லூரிகட்கு அனுப்பி விடுதலின், பொருளில்லாதவரே, பெரும்பாலும் தனித் தமிழ்ப் பயிற்சியினையடைய விரும்புகின்றனர். எனவே, இத்தகைய பிள்ளைகட்கு உணவு உறையுள் முதலிய வசதிகள் செய்து தந்து, அறச்சாலைகள் வைத்து நடத்துதல் வேண்டியதாகின்றது. தஞ்சை நாட்டாண்மைக் கழகத்து ஆதரவில் திருவையாற்றில் நடக்கும் அரசர் கல்லூரியில் வடமொழி, தமிழ்மொழி ஆகிய இரு மொழிகளும் பயிற்றப் பெறுகின்றன. ஆசிரியர்களூதியம் உணவுச் செலவுகட்கெல்லாமாக, ஆண்டொன்றுக்கு இலட்சக்கணக்கான

ரூபா வேண்டப்பெறுகின்றது. இத்தகைய பெருஞ் செலவுகளை
ஏற்று நடாத்துமிடம் இவ்வொன் றிரண்டுதானு மிலையாயின்,
புலமைபற்றிய தனித் தமிழ்க் கல்லூரிகளோ, அவற்றிற் பயில்வாரோ
இல்லையன்றே. இங்ஙனம் தனித் தமிழ்க் கல்லூரிகள் வைத்து
நடாத்துவது, எல்லோருக்கு மியலாததாயினும், அரசாங்கத்தினர்,
மாநாட்டாண்மைக் கழகத்தினர், சைவ வைணவ மடாலயத்
தலைவர்கள், மிக்க வருமானமுள்ள கோயில்களின் தருமகருத்தாக்
கள், மிக்க செல்வவளம் பொருந்திய சிற்றரசர்கள், பெருஞ் செல்வர்
என்று இன்னவர்கள் ஆங்காங்கு வைத்து நடாத்துதல் அரிய
செயலாகுமா? கல்லூரியே வைத்து நடத்துவது இயலாததாயினும்,
இயன்ற அளவு மாணவர்கட்கு உணவு முதலிய வசதிகளளித்து,
கல்லூரிகளிருக்குமிடங்களுக் கனுப்பியாவது படிப்பிக்கலாமன்றே?
தஞ்சைமாநாட்டாண்மைக் கழகத்தினர், பிறர் இங்ஙனம் உதவி
தந்து அனுப்பப்பெறும் மாணவர்க ளெல்லோரையும் ஏற்றுக்
கொள்ளச் சித்தமாகவுள்ளார்கள். இவர்கள் உரத்தநாடு, இராசா
மடம், நீடாமங்கலம் முதலிய விடங்களிலும், ஆரம்ப நடுத்தர
உயர்தர ஆங்கிலப் பள்ளிக்கூடங்களை உணவு முதலிய வசதிகள்
தரும் அறச்சாலைகளுடன் அமைத்து நடாத்திவருகின்றனர். ஆத
லின், இன்னு மதிகமாகத் தனித்தமிழ் மாணவர்களை ஏற்க இயலாத
வராகின்றனர். இங்ஙனம் பேரறங்கள் செய்வதற்கு உரிய பெருஞ்
செல்வங்களைத் தருமத்திற்காக வைத்துப் புகழுடம்பு எய்திய
தஞ்சை மன்னர் சரபோஜி மகாராஜாவுக்கு இத் தமிழுலகம எத்
துணைக் கடமைப்பட்டுளது! தமிழ்த்தாயின் தவப்புதல்வர் இத்
தமிழ் மன்னரேயன்றே!

இனி, தனித் தமிழ் வித்துவான்கள் என வருவோரும், இன்
னும் சின்னாளுள், B. A. முதலிய பட்டதாரிகளைப்போல, வேலை
யில்லாக் குறைபாட்டினை எய்துவது திண்ணமாகும். இக்காலத்தே
'படிப்பும் படிப்பாளர்தம் பிழைப்பும்' என்பதே, பல அறிஞர்களும்
கூடித் தீர்க்கவேண்டிய முக்கியமான ஆராய்ச்சியாக விருக்கின்றது.
எண்ணிறந்த தொழில்களும், தொழிற்சாலைகளும் நிரம்பிய மேல்
நாடுகளிலேயே, வேலையில்லாக் குறைகள் மிகவும் காணப்படுமாயின்,
அரசாங்க வேலைபோன்ற இரண்டொரு வேலைகளையன்றி யறியாத
நம் நாட்டு மக்கட்கு வேலையகப்படாக் குறை மேருமலையினும்
பெரிதாக வுள்ளதாகுமன்றே? அதிலும் அரசாங்கத்துப் பல்வகை
வேலைகளுங் கிட்டாத தனித்தமிழ் வித்துவான்கள் நிலையினைக்
கூறவும் வேண்டுமோ? பண்டைக் காலத்தேயுள்ள கல்வியாளர்கள்
"யாதானு நாடாமால் ஊராமால்" என்னுஞ் செருக்கொடு வாழ்க்கை
நடாத்திவரும் ஏதோ ஒரு தொழிற்றிறம் வல்லராயிருந்தனர். இக்
காலத்தே காணப்பெறும் புலவர், வித்துவான், பண்டிதர் என்ற
புலமைப் பட்டங்களைத் தரித்த பெயர்களின் மாறாக, பண்டைக்
காலத்தே, கூலவாணிகன் சாத்தனார், மருத்துவன் தாமோதரனார்,
அறுவை வாணிகன் என்றின்னோரன்ன தொழிற்றிறம் வல்ல பட்டங்
களைக்கொண்ட பெயர்களே பெரும்பாலும் பண்டைப் புலவர்கள்

பெயர்களாகக் காணப்படுகின்றனவன்றோ ! எனவே, அக்காலத்துக் கல்வியாளர்கள், இக்காலத்தேபோற் குறுகிய நெறிகளுட் புகுந்து, இடர்ப்படாது தத்தமக் கியன்ற தொழிற் றிறங்களையெல்லாம் நாடி, இனிது வாழ்க்கை நடாத்திவந்தனரென்பது அறியப்படுகின்றது. இதனால் நம் நாட்டில், கலைக் கல்விகளும், தொழிற் கல்விகளும் ஒருங்கு கற்பிக்கவேண்டும் இன்றியமையாமையை உணர்ந்து நம் தமிழன்பர்கள் ஆங்காங்குச் செய்வதற்குரிய வேறு வேறு தொழில் முறைக் கல்விகளைப் புகட்டி வருவாராயின், கல்வி பயின்று வெளியேறும் மாணவர்கள் பிழைப்பிற்கு என்செய்வோமெனுங் கவலையின்றி வெளிவருவரென்பது திண்ணமன்றோ ! மேலும், அரசாங்கத்து வேலைகளுள், பத்திரப்பதிவு (Registration), பிரதி எழுதல் (Copyist) முதலாய பல அரசியல் வேலைகளைத் தமிழ்ப்புலம் வாய்ந்தவர்கள் திறம்படச் செய்யக்கூடுமாகையால், அத்தகைய வேலைகளெல்லாம் வித்துவான் முதலிய பட்டதாரிகளுக்கும் எய்துமாறு தமிழ் மக்கள் முயலவேண்டும். பள்ளிக்கூடங்களிலும் இவர்கள் தமிழ் மாத்திரமன்றி மற்றைச் சரித்திரம் முதலான தமிழ்ப் பாடங்களையும் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் வரத் தமிழ் மக்கள் முயலவேண்டும்.

அன்பர்களே ! இனி, பொதுவாக நம் நாட்டுக் கல்விப் பயிற்சியினையும் சிறிது ஆராய்வாம்.

கலைப் பயிற்சியானது எந்த நாட்டிலும் அதன் அதன் தாய்மொழி வழியாகவே நடைபெறுகின்றது. நம் நாட்டிலோ, பெரும்பாலும் ஆங்கில மொழியாலே பயிற்றப்பெறுகின்றது. இதனால், காலம் பெரிதும் வீணே கழிவதுமட்டுமன்றி, தாய்மொழிப் பயிற்சியும் குறைந்துபோகின்றது. இங்ஙனம் பிற மொழியாற் கலைப் பயிற்சி செய்யப்பெறுவதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று, கலைப் பயிற்சிக்கு உரிய நூல்கள் இல்லாமை. இரண்டு, அவற்றைத் தாய்மொழி வழியாகப் பயிற்றும் தாய்மொழி வல்லவர் இல்லாமை. இவ்விரு குறைகளும் நீங்கினாலன்றிக் கலைகளைத் தாய்மொழி வழியாகப் பயிற்றவேண்டுமெனக் கட்டாயம் செய்வதில் பயனின்று என்பது அனுபவமுடையார் அறிவார். ஆங்கிலம் ஒழிந்த பிற கலைகளெல்லாம் தாய்மொழி வழியாகப் பயிற்றுவது இயலாத காரியம் அன்று. இக்குறைகளுள் முதலில் நீக்கவேண்டுவது தாய்மொழியில் கலைகளையெல்லாம் ஆக்கவேண்டுவதே. இக்குறை தீர்ந்தால், தாய்மொழி வழியாகப் போதிக்கவல்ல ஆசிரியரில்லாக்குறை எளிதில் நீங்கிவிடும். இம் முதற்குறையினை நீக்குவதுபற்றி, நம் தமிழ்ச் சங்கம் வேண்டும் காரியங்களையெல்லாம் செய்து வருதலின், இது விரைவில் நீங்கும் என்பது திண்ணம். இங்ஙனம் தாய்மொழியிற் கலைகளை மொழிபெயர்த்துக் கற்பியாது, இப்போது உள்ள நிலையில் ஏனைய மொழிகளாற் கற்பிப்பதாயின் அது, தமிழ் மக்கள் எல்லோரும் ஒருங்கு கலைப்பயிற்சி அடையக்கூடியதாக இராது. அன்பர்களே ! எந்த நாடு, தன் மக்கட்குரிய பொருள்களைத் தானே ஈட்

டித் தரவல்லதோ, அதுவே நாடு எனப்படுமென்றும், எந்த நாடு, தன் மக்கட்குரிய பொருள்களில் எதொன்றையும் பெறப் பிற நாட்டினை எதிர்நோக்குகின்றதோ, அது நாடு எனக் கூறலாகாது எனவும் கண்ட நமது தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

> "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரு நாடு."

எனத் திருவாய் மலர்ந்திருக்கின்றனரன்றோ! இங்ஙனம் ஒரு நாட்டின் தேவையாகிய எல்லாப் பொருள்களும், அதுவே படைத்துக் கொள்வதாயின், இக்காலத்து, அந்நாடு, உலகிலுள்ள மற்றைத் தேசங்களிலெல்லாம் இயற்றப்பெறும் பொருள்களுள், தனக்கு இன்றியமையாதவற்றையெல்லாம், தானே தேடிக்கொள்ளல் வேண்டாமா? அங்ஙனம் தேடுவதாயின், அவ்வப் பொருள்களை ஆக்குந் தொழிற் சாலைகள் வேண்டாமா? தொழிற்சாலைகள் வேண்டுமாயின், அவ்வவற்றிற்குரிய தொழில் அறிவு வேண்டாமா? அவ்வறிவை யாவரும் எளிதிற் பெறவேண்டின், அக்கலைகளையெல்லாம் தாய் மொழியில் மொழிபெயர்க்க வேண்டாமா? இங்ஙனம் தொழிற் கல்விக்குரிய நூல்கள், நந் தாய்மொழியில் எத்துணையுள்ளன?

புதுவதாக வேண்டப்படும் எவ்வகை நூலினையும், வேண்டிய அளவு இயற்றிக் கொள்ளத் தொல்காப்பியமே வழி காட்டுகின்றது. தொல்காப்பியத்திற் கூறப்படும் நூல் வகைகளுள் "விருந்து" என்ப தொன்றாகும். "விருந்து" என்பதற்குப் புது வகையான நூல்கள் என்பது பொருளாகும். இங்ஙனம் இக் காலத்திற்கு வேண்டிய நூல்களை இயற்றுவது, நமது மிக இன்றியமையாத முதற் கடமையாகும். இத்தகைய நூல்களை ஆக்குவதற்கு நமது தமிழ்ச் சங்கம் செய்து வரும் முயற்சி மிகவும் பாராட்டுவதற் குரியதாகும். வேற்றுக்கலைகளைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு, இந்தச் சங்கம் செய்து வரும் தொண்டே, தமிழ்த் தாய்க்குக் காலத்தினாற் செய்யும் பெருந்தொண்டாகும். இத்தகைய நூல்களை ஆக்குவதற்கு இன்றியமையாது வேண்டும் சொற்கள் நந்தமிழிலேயே ஆக்கிக் கொள்ளல் வேண்டும். மிக இன்றியமையாத விடத்து வேற்றுச்சொற்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், அவைகளைத் தமிழ் இலக்கண வரம்பிற்கு உட்பட்டு ஆக்கல்வேண்டும், இதனை நம் தமிழ்ச் சங்கம் உணர்ந்து சிறம்படச் செய்து வருவது பாராட்டத் தக்கதாகும். இங்ஙனம் ஆக்கப்பெறும் புதுக்கலைகளால் மொழிவிரிந்து, தொழிலறிவு விரிந்து, தொழிற்றுறைகள் விரிந்து நாட்டின் வளம் விரிந்தாலன்றி, நம் நாடு ஏனைய நாடுகளின் பெருமைகளை எய்தல் இயலாது. இதற்குரிய முயற்சிகளைச் செய்யாமல், நம் நாடு நகரங்களைப் புராண முறைப்படி பாராட்டிக் கொண்டிருப்பதிலும், நமது தாய்மொழியின் பண்டைப் பெருமையினைப் பாராட்டிக் கொண்டிருப்பதிலும், பெரும்பயன் எய்திடாது. சுருங்கக்கூறின், நமது நாட்டுக் கல்விப் பயிற்சியை, ஆங்கிலம் ஒழிந்த கலைப்பயிற்சிகளை யெல்லாம் தாய்மொழி வழியாக நடைபெறச் செய்யவும், தாய்மொழியில் புலமைப் பயிற்சியோடு பன்

னுட்டுக் கலைப்பயிற்சியும், தொழிற் கல்வியும் சேர்த்துப் பயில்விக்கச் செய்யவும், நாம் முற்படவேண்டும். (தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தினர் இருபதினுயிர ரூபா செலவில் மாணவர்கட்கு இயந்திர அறிவைப் புகட்டும் கலைப் பயிற்சியையும் சேர்த்துப் பயில்விக்க வேண்டும்ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்). அரசியலாரும் மாநாட்டாண்மைக் கழகத்தாரும் இத்தகைய காரியங்களில் தத்தமக் கியன்றவைகளைச் செய்ய முற்படுவார்களாயின், நம்நாடு விரைந்து முன்னேறும் என்பதிற் றடை என்னை? இனி, தாய்நாட்டில் அன்பும், தாய்மொழியிற் பற்றும், சுதந்தர உணர்ச்சியும் இளைஞர்கள் உள்ளத்தே நிலை நாட்டத்தக்க நூல்கள் எண்ணிறந்தன பிற நாடுகளில் கல்விப் பயிற்சியில் விரவியுள்ளன. அவற்றால் அவ்வத் தேயங்கள் அடைந்துள்ள நன்மைகளை நாமும் அடையவேண்டின் அத்தகைய நூல்கள் நமது நாட்டுக் கல்விப் பயிற்சியில் கலந்திடல் வேண்டும்.

இனி, மேனுட்டார், தமது தாய்மொழி வளங்குறித்துச் செய்வனவற்றைப் பார்ப்போம். தமது மொழியுள், உலகில் உள்ள எல்லாக்கலைகளையும், மொழி பெயர்த்து அமைத்துக் கொள்ளுகின்றனர். இலக்கண இலக்கியங்கள் வல்லவர்களேயன்றி, எல்லோரும் அறியுமாறு, அவைகளை எளிய வசன நடைகளாலே, ஆக்கிக்கொள்ளுகின்றனர். அந்நூல்களை, மாணவர்களே யன்றி, வயதானவர்களும் அறியுமாறு, புத்தகாலயங்கள் ஆங்காங்கு நிறுவுகின்றனர். ஊர்தோறும் ஊர்தோறும் அப்புத்தக நிலையங்களை எடுத்துச்சென்று, வலிதில் வீடு வீடாகச் சேர்த்துப், பயிலச்செய்கின்றனர். புத்தகாலயங்களில் யாரும் எந்தநேரத்திலும் சென்று எந்த நூலினையும் எளிதில் எடுத்துப் பயிலலாம். ஐயம் வரும் இடங்களை விளக்கிச்சொல்லும் சிறந்த ஆசிரியர்கள் நூல் நிலையங்களில் எந்தவிடத்திலும் காத்திருப்பர். நிலையங்களிற் படிப்பதன்றி, வீடுகளுக்கும் எடுத்துச் செல்லலாம்; படித்து முடித்துப் பின் கொடுக்கலாம். சிறந்த நூல்களை அரசாங்கத்தினர் பணவுதவி தந்து எழுதச் செய்வர். தாமே செலவு செய்து அச்சிடுவோர்க்கும், பணவுதவி செய்து பற்பல பிரதிகளைப் பெற்றுக் கல்லூரி கலாசாலைகளுக்கு வாங்கியளிப்பர்: பொது மக்களுட் செல்வராகவுள்ளார் யாவரும், தத்தம் இல்லங்களில் அரிய நூல்களின் நிலையங்கள் அமைப்பர். இங்ஙனமாக மேனுட்டார், தம் தாய் மொழிப் பயிற்சி பற்றிச்செய்யும் தொண்டுகள் மிகப்பலவாகும். உலகிலுள்ள எல்லா மொழிகளின் அரிய நூல்களும், மேனுட்டார் பெரு நூல்நிலையங்களுட் காணலாகும். நமது தாய்மொழியிலுள்ள பழைய ஏட்டுச் சுவடிகள் பலவும், 'லண்டன்' 'பாரிஸ்' முதலாகிய பெரு நகரங்களிலுள்ள பெரும் நூல்நிலையங்களுள் இன்றுங் காணலாகும். மேனுட்டார் செயல்கள் இவ்வாருக, நாம், நமது தாய்மொழி வளம்பற்றி என்ன செய்கின்ரேம்? இன்னும் நமது தாய்மொழியில் வெளிவராத ஏட்டுச்சுவடிகள், எத்தனையோ பலவுள்ளன. மிகவும் முயன்று ஏட்டுச்சுவடிகளைத்தேடி அச்சிடும் உபகாரிகட்கு உதவிசெய்வார் பலருளரேல், அத்தகைய அரிய சுவடிகளெல்லாம்

வெளிவந்து விடுமெனல் திண்ணம். அரசியலாரும் மாநாட்டாண்மைக் கழகத்தினரும், பண்டை எட்டுச்சுவடிகள் பல இறந்து போகாமல் காப்பாற்றும் கடமையினை இயன்றவளவு மேற்கொள்ளல் வேண்டும். தமிழ்ச் சங்கங்களும், தமிழகத்துச் சமய மடங்களும், தமிழ்ச் செல்வர்களும், இத்தகைய தொண்டுகளில் ஈடுபடுதல் வேண்டும். மேனாட்டாரைப் போலவே கற்றோரேயன்றி மற்றோரும் படித்துணரும்படி வசன நடையில் கலைகள் எழுதி வெளியிடல் வேண்டும். தமிழ்த் தொண்டே கருதி நடக்கும் அரிய தமிழ்ப் பத்திரிகைகளை யெல்லாம் யாவரும் ஆதரித்தல் வேண்டும்.

அன்பர்காள்! இனி இத்தகைய தொண்டுகள் பலவற்றையும் செய்யவே முன்வந்து, செய்துவரும், இத்தமிழ்ச் சங்கத்திற்கு, இத் தொண்டுகளில் இனி ஈடுபட வீருக்கும் இளையனாகிய யான், இவைகளை யெல்லாம் கூறுவது பயனில்லாததாகும். சிறியேன் இனித் தங்கள் தொண்டுகளில் கலந்துகொண்டு, என்னால் இயன்றனவெல்லாம் செய்வதே என் கடமையாகும். இத்தொண்டுகளில் முன்னின்று உழைக்கும் பெரியாராகிய இச்சங்கத் தலைவர் திருவாளர் K. சுப்பிரமணிய பிள்ளை M.A.. M.L., அவர்கட்கும் அதன் அங்கத்தினர்களுக்கும் தமிழ் உலகமே மிகவும் கடமைப் பட்டுள்ளது. இதற்குமுன் என்றும் யாரும் செய்தறியாத தமிழ்த் தொண்டுகளைச் செய்து முடித்திருக்கும் பெரியராகிய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய பலரையும் நாம் இப்போது நினைந்து நன்றி பாராட்டக் கடமை பூண்டுளோம். பல அரிய தமிழ்த் தொண்டுகளைச் செய்து வரும் தமிழ்ப் பெருந்தொண்டர்களாகிய தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரே இது பொழுது தமிழ்த் தாய்க்குப் புத்துயிரளித்து வருவாராவர். இக்கழகம் நீடு வாழ்க. இக்கழகத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பேரியோர்களே! பலவிடங்களிலுமிருந்தும் தத்தம் அரிய வேலைகளை விட்டு, இங்குவந்து கூடியிருக்கும் உங்கள் வாய்மொழிகளைக் கேட்கவும், அரிய பெரிய முடிபுகளைத் தெரிந்து கொள்ளவும், உரியதாகிய இந்தக் காலத்தை, என் எளிய உரையினை வளர்த்துப் பயனில்லாமற் கழிப்பது பொருந்தாதெனை எண்ணி, இம்மட்டுங்கூறி நிறுத்துகின்றேன். அன்பரீர்! இதுகாறும் பொறுமையுடனிருந்து, என் எளிய உரைகளைக் கேட்டிருந்த உங்கட்கெல்லாம் பன்முறையும் எனது வணக்கத்தினைச் செலுத்தி, எல்லாம் வல்ல இறைவனும் இறைவியுமாகிய நெல்லையப்பர் காந்திமதியம்மையின் திருவடிகளை வணங்குகின்றேன்.

---

# ஆராய்ச்சிப் பகுதி-Research

## “வெண்பாவில் புகழேந்தி” *

[வேலணையூர் பண்டிதர். திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்]

*அருந்தமிழ்த் தாயின் பெருந்தவப் புதல்வர்களே !*

நம் தாய் மொழியாம் தமிழ்மொழி இற்றைஞான்று இறந்தொழியும் நிலையிலுள்ள, ஆரியம், இலத்தீன் முதலிய தொன்மொழிகள் தோன்றிய காலத்துத் தோன்றியதென்பதையும், இற்றைஞான்று புகழ்பெற்றிலங்கும் ஆங்கிலம், பிரான்சு முதலிய புது மொழிகளிலும் பார்க்கச் சிறந்தமைந்த நல்லிலக்கண வரம்பையுடைய தென்பதையும், கடவுளரும் காதல்கொள்ளும் இனிமையாம் குணத்திசைந்து தட்பமும் தகவும் ஒட்பமும் ஒருங்கமையப்பெற்ற தென்பதையும், பல்லுயிரும், பலவுலகும் படைத்து அளித்து அழிக்கும் எல்லையறு பரம்பொருள்போல் முன்னைப் பழமொழிகட்கு முன்னைப் பழமொழியாய்ப் பின்னைப் புதுமொழிகட்கும் அப் பெற்றித்தாய் விளங்குகின்ற தென்பதையும், எம்மொழியகத்தும் காணக்கிடையாப் பொருளிலக்கணப் பாகுபாடு உடையதென்பதையும், பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்கும் தன்மையுடைய உயர் தனிச் செம்மொழி என்பதையும், குமரியொடு வடவிமயத்தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதனால் இந்தியா முழுவதற்குமே இறைமொழியாக வழங்கப்பட்ட தென்பதையும், இன்னும் இன்னோரன்ன பல சிறப்பியல்களையும் நீங்கள் நன்கறிவீர்கள். ஆகையால் இவைபற்றி விரித்தல் வேண்டியதின்று.

இத்தகைய அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழி நச்சும் பெருமை முச்சங்கத்து ஆலவாயவிர்சடைக்கடவுள், அகத்தியர், முருகவேள், பெருந்தேவனார் முதலிய முத்தமிழ்த் துறையின் முற்றப்போகிய முதுபுலவர்களால் முற்காலத்தில் வளர்க்கப்பட்டது. (இச்சங்க வரலாறுகளை இறையனார் அகப்பொருளுரையிற் கண்டுகொள்க). நல்லிசைப் புலவர்கள் நல்குரவால் நலியாது வள்ளல்கள் உள்ளத்தால் உவந்தளித்த பொருள்பல பெற்றுத் தம் வாழ்க்கையினை நடத்தினர். அதனால், அவர்

---

*யாழ்ப்பாணக் கலாநிலையத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

கள் தம் ஆயுள் முழுவதையும் அருநூல்கள் அமைப்பதிலேயே கழித்தனர். நாளுக்குநாள் நயமுடை நன்னூல்கள் தோன்றின. இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழ் நூல்கள் தோன்றின; மருத்துவ நூல்கள், சோதிட நூல்கள், பொருள் நூல்கள், வான நூல்கள், உலக புராணங்கள் முதலியன தோன்றின.

இவ்வாறு பெருகிய தமிழ்நூற்கடல் கொடுங் கடலாற் கொள்ளை கொள்ளப்பட்டது. முத்தமிழ் நூல்களும் பிறவும் அழிந்தொழிந்தன. பெருநாரை, பெருங்குருகு, இசைநுணுக்கம், இந்திரகாளியம் முதலியன, புகழுடம்பை நிறுத்திப் பூதவுடம்பைப் போக்கினார்போற் றம்பெயரை நிறுத்தித் தாமழிந்தன. இருந்தன சிலவும் எரியாலும், செல்லாலும், இன்னும் பிற ஏதுக்களாலும் அழிந்துகொண்டே வந்தன. இறுதியில், இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பன இடைச் சங்க காலத்து இருந்த ஒல்காப்புலமைத் தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்தாய்ச் சிற்றளவினவாகிய சொற்றொடர்களில் சிறந்தமைந்தனவாகிய பெரும் பொருள்கள் தோன்றத்திகழும் தொல்காப்பியமும், கடைச்சங்ககால நூல்களாகிய அன்பினைந்திணைக் களவினைக் கூறும் களவியல், கீழ்க்கணக்கு நூல்கள், அருங்காவியங்களாகிய பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியனவுமே. இவற்றிலும் சிலவற்றில் சில பகுதிகள் இல்லாதிருத்தல் துயரத்திற் கிடமானதே. முன்னைய இரண்டும் இலக்கண நூல்கள். மேற்கணக்கு நூல்கள் ஐவகைப் பாக்களாலும் அகப்புறப் பொருட்டுறைகள் பற்றித் தொகுக்கப்பட்டவை. கீழ்க் கணக்குநூல்கள் அறம், பொருள், இன்பம், அடுக்கித்திறம்பட வெண்பாவால் யாக்கப்பட்டன. பின்னைய மூன்றனுள் பாரதம் வெண்பாவும் அகவலும், உரையும் விராய்த் திருந்திய செந்நாவுடையிருங்கலைப் புலவராய பெருந்தேவனாராலும், சிலப்பதிகாரம் அகவலால் அரசிளம் புலவராய இளங்கோவடிகளாலும், மணிமேகலை அகவலால் தண்டமிழ்ச் சாத்தனாராலும் இயற்றப்பட்டன. இவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையுங்கூறும் காப்பியங்களாம். இவற்றின் பின்தோன்றிய சிறந்த காவியங்களாகிய சிந்தாமணி, இராமாயணம், சூளாமணி, நைடதம் முதலியனவும், புராணங்களும், பிறவும் சங்ககாலத்தி லிலங்கிய வெண்பா அகவல் முதலியவற்றால் ஆக்கப்படாது இலங்காத விருத்த பேதங்களால் திருத்தமுற யாக்கப்பட்டன.

இவற்றையெல்லாம் நன்கு சீர்தூக்கி ஆராயின், விருத்தங்களால் காவியங்களைக் கவினுற இயற்றுவது இலகுவானதென்பதும், அகவலால் அழகுற அமைப்பது சிறிது கடினமானதென்பதும், வெண்பாவால் பண்புறப்பாடுவது அரிதானதென்பதும் தெற்றெனப்புலனும். இது, காவியக்கடலுள் புலவர் திலகராகிய புகழேந்திப்புலவர் இயற்றிய நளவெண்பா ஒன்றே முழுவதும் வெண்பாவினுல் ஆக்கப்பட்டிருத்தலினுலும் விளங்கும் இவ்வருஞ் செயலைச் செய்தமையாற்றுன்.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான்
விருத்தமென்னும்
ஒண்பாவில் உயர்கம்பன் கோவை உலா அந்தாதிக்கு
ஒட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் வசைபா
டக்காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலா தொருவர் பகரொணுதே."

என்னும் இன்னின்ன செய்யுள் செய்தற்கு இன்னுரின்னுரே சிறந்தார் என்று கூறும் இச்செய்யுள் புகழேந்திப் புலவரை வெண்பா இயற்றுவதில் சிறந்தாராக எடுத்துக் கூறிற்று என்னலும் சாலும். அறிஞர்களே! இஃதொன்றே புகழேந்திப் புலவர் வெண்பாவில் புகழ் ஏந்தி என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்காதா?

இவர், கம்பர் ஒட்டக்கூத்தர் ஒளவையார் முதலிய சிறந்த புலமைமிக்க கலைவாணர்கள் இலங்கிய காலமாகிய பன்னிரண்டாம் நூற்றுண்டில் இருந்தவர். இக்காலத்தைக் கடைச்சங்க காலத்தின்பின் தமிழ் வளர்ச்சி ஓங்கிய காலங்களிற் றலைசிறந்ததெனலாம். செங்கற்பட்டை யடுத்துள்ள பொன்விளைந்த களத்தூரில் தொண்டைமண்டல வேளாளகுலத்திற் பிறந்தவர். களத்தூரில் வசித்திருந்த ஒரு வண்மைநிறைந்த வேளாளனது வயலினுள் நெற்கள் பொற்கதிரீன்றன—என்றும் அதனுல் அவ்வூர் பொன்விளைந்தகளத்தூரென்று அழைக்கப்பட்டதென்றுங் கூறுவர். "சடைச்செந்நெல் பொன் விளைக்கும்" என்னும் புகழேந்தியார் கூற்றும் இக்கதையை வலியுறுத்துகின்றது.

நளவெண்பா ஏடுகள் சிலவற்றில் சிவபிரானுக்கும், சிலவற்றில் திருமாலுக்கும் உரிய காப்புச் செய்யுள்கள் காணப்படுதலினுலும், நூலினுள் சிவபிரானைக் குறித்து "வையத்தாருண்ணுக் கடுவிடத்தை உண்ட ஒரு மூன்று கண்ணுனைப் போன்றனளே" "பொடியாடி கொன்றதெல்லாம் பொய்"

"நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும்" என்று மூன்றிடத்தும், திருமாலைக் குறித்து,

"செங்கண்மாலல்லனேல்," "மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்பாகப் புக்கோர் அருவினைபோற் போயிற்றே," "நாராயணாய நமவென் றவனடியிற் சேராரை வெய்துயரம் சேர்ந்தாற்போல்" "மையாழி யிற்றுயிலும் மாலனையான்" என்று நாலிடத்தும் கூறப்பட்டிருத்தலினாலும் இவர் சைவ சமயத்தினரா? வைணவ சமயத்தினரா? என்று ஒருதலை துணிதற்கு முடியாதிருக்கிறது. கர்ண பரம்பரைக் கதைகளாலும் பிறவற்றாலும் பலரிவரை வைணவ சமயத்தினரென்பர். கலி நளனைச் சேர்ந்தான் என்பதை "நாராயணாய நமவென் றவனடியிற் சேராரை வெய்துயரம் சேர்ந்தாற்போல்" சேர்ந்தான் என்றும், நளனது தேர்ப்பாகன் வடிவு நீங்கியது எனுமிடத்தில் "மிக்கோனுலகளந்த மெய்யடியே சார்பாகப் புக்கோர் அருவினைபோல்" நீங்கியது என்றும் புலவராற் கூறப்பட்டிருப்பன அவர் கூற்றை வலியுறுத்தும். இதனை அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை எடுத்து உரைப்பார்களாக. இவருடைய கல்வி யறிவைக் கண்ட செண்பக மாறன் என்னும் பாண்டிய னிவரைத் தன்னுடைய ஆத்தான வித்துவானாக்கினான். வேறு கூறுவாருமுளர். அவனுடனிருந்த நாட்களில் அவன் மகளுக்குக் கல்வி கற்பித்து அவளைப் பண்டிதை ஆக்கினர். இங்ஙனம் இருக்கும் நாட்களில் பொன்னி நாடாளும் புரவலனும் குலோத்துங்கனுக்குப் பெண் கேட்கும்படி அவன்றன் ஆசிரியரும் ஆத்தான வித்துவானுமாகிய ஒட்டக்கூத்தர், பாண்டியனிடம் வந்து பேசிக் கொண்டிருக்கையில், பாண்டியன் பரிகாசமாய்ச் "சோழன் பாண்டிய குலத்துப் பெண்ணைக் கொள்ளத்தக்க உயர்ச்சி உடையவனா? அவனுடைய சிறப்புக்கள் யாவை? சொல்லும்" என்று கேட்டான். உடனே, கூத்தர் சோனுடைய குதிரை, நதி, மலை, குலம், வீரம், கொடி, நகர், தேசம் எனும் எட்டிற்கும் பாண்டியனுடைய குதிரை முதலிய எட்டும் ஒப்பாகா எனும் பொருளமைந்த,

"கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே
கூறுவதும் காவிரிக்கு வையையே அம்மானே
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானே
ஆதித்தனுக்கு நிகர் அம்புலியோ அம்மானே
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே
ஊருக்கு உறைந்தநிகர் கொற்கையோ அம்மானே
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டி நாடுஅம்மானே"

எனும் பாடலைக் கூறினர். இதைக் கேட்ட புகழேந்திப் புலவர் அதற்கு மாருகப் பாண்டியனுடைய மலை, நகர், கொடி, குலம், ஆறு, மாலை, வீரம் என்பன சோழனுடைய மலை முதலிய ஏழிலும் சிறந்தன என்பதைக் காரணங் காட்டி நிறுவிப் பாண்டியன்றன் பராக்கிரமம் பகரவரிது என்றும் பாடினர்.

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்தது அம்மானே!
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானே!
திருநெடுமால் அவதாரஞ் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானே!
கரையெதிரல் காவிரியோ வையையோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவை பணிந்ததும் சோழன் பதந்தனையோ அம்மானே!
பாண்டியனர் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானே."

என்பதே அச் செய்யுளாகும். இச் செய்யுளிலிருந்தே புகழேந்தியரது விரிந்த அறிவையும் நுண்மாணுழை புலத்தையும் அறிந்துகொள்ளலாம்.

பாடியவுடன் கூத்தர் பின்னும் தம் அரசனைப் புகழ வேண்டி "வென்றிவளன் விறல்வேந்தர் தம்பிரான்", என்றும் "முதுகிக்கிடான் கவசம்—துன்றும்" என்று கூறி ஆலோசிக்கப் புகழேந்திப் புலவர் "வெறியார் தொடை கமழும் மீனவர்கோன் வைவேல், எறியான் புறங்கொடுக்கின்." என்று தம் அரசனை வீர வேந்தனுக்கிப் பாடி முடித்தார். இன்னணம் தாம் பாடியவற்றிலும் சிறந்த பாடல்களைப் பாடிய புகழேந்திப் புலவர்மீது கூத்தருக்குப் பொருமை உண்டாயிற்று.

---

## தனித்தமிழும் கலப்புத்தமிழும்

[மறைமலையடிகள் மகனர் வே. மாணிக்கவாசகம் எழுதியது.]

(கசரு ஆம்-பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, உலகத்தின்கணுள்ள மேற்கூறிய மதத்தவர்களெல்லாருந் திருவள்ளுவர் திருக்குறளைத் தத்தமக்குரிய பொதுநூலாகக் கைக்கொண்டு பாராட்டுவரென்று தாங்கள் சொல்லுவது பொருந்தாததா யிருக்கின்றது. அங்ஙனமானல், எல்லா மதத்தவரும் திருக்குறளைத் தத்தம் நூலாகக்கொண்டு பாராட்டுவரென்று பழைய தமிழ்ப் புலவரொரு

வர் கூறியது என்னென்றால், ஒவ்வொரு மதத்திலும் உள்ளாரில் உண்மை காணும் விருப்பமும் முயற்சியுமுடைய நடுநிலையாளர் இருப்பராதலால், அவர்கள் தம் மதத்துக்கு ஆகாத கொள்கைகள் திருக்குறளில் இருந்தாலும், அக்கொள்கைகள் எல்லாருந் தழுவத் தக்க மெய்ம்மை உடையனவாயுந் தம்மதக் கொள்கைகள் அம்மெய்ம்மை இல்லாதனவாயும் இருத்தலை ஆராய்ந்து காண்பராதலின், அத்தகையவர்களே திருக்குறளைப் பாராட்டுவர் என்பதே அந்நல்லிசைப் புலவரின் கருத்தாகும். கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய திருவள்ளுவரின் கொள்கைகள், அக்கொள்கைகட்கு மாறான கிறிஸ்துவ, மகமதிய, பௌத்த, நாத்திக மதத்தவர்களில் நடுநிலையாளரால் இக்காலத்தில் தழுவப்படுதல் எவரும் அறிந்ததேயாகும்.

இனி, மேற்கூறிய மதங்களுள் ஒன்றனிடத்திலுஞ்சேராத திருவள்ளுவர், சைவசமயத்துக்கே உரியவர் என்பது எதனாலெனிற், சைவர்கள் பிறப்பு இறப்பு இல்லாத ஒரு முழுமுதற் கடவுளையே வணங்குதல்போலத் திருவள்ளுவரும் வணங்குதலாலும், உயிர்கள் எக்காலத்தும் உள்ள முதல்கள் என்று சைவர்கள் கூறுதல்போலவே திருவள்ளுவரும் 'மன்னுயிர்' 'மன்னுயிர்' என்று உயிர்களை அடுத்தடுத்துச் சொல்லுதலாலுஞ், சைவர்கள் ஊழ்வினையும் மறுபிறப்பும் உயிர்களுக்கு உண்டென்று கூறுதல் போலவே அவை யிரண்டும் உயிர்களுக்கே உண்டென்று திருவள்ளுவருங் கூறுதலாலும், கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய அறம் சைவசமயத்துக்கே முதன்மையானவை என்பதற்கு எல்லா மதத்தவரும் ஊனுண்ணாமையைச் சைவமென்று அழைத்தலாற் பெறப்படுதலின் அத்தகைய கொல்லா அறத்தைத் தமது நூலெங்கும் வலியுறுத்துந் திருவள்ளுவரும், அதனாற் சைவ ஒழுக்கமே யுடையவரென்பது பெறப்படுதலாலுஞ்.

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்னுந் திருக்குறளால் இறைவன் திருவருளைச் சார்ந்தார்க்கே அவரைப் பற்றிய இருவினையும் அறியாமையுமாகிய நோய் நீங்குமென்று இவர் கூறும் முடிந்த நிலை சைவசித்தாந்த முடிந்த நிலையாதல் இத்திருக்குறளை, எடுத்துக்காட்டி அந்நிலையை விளக்குந் திருக்களிற்றுப்படியார் என்னுஞ் சைவசித்தாந்த நூற்பாவினால் நன்கு அறியப் படுதலாலும் இவர் சைவ சமயக்கொள்கை யொன்றே உடையரென்பது ஐயமின்றித் தெளியப்படும்.

இங்ஙனமாகச், சைவக் கொள்கை ஒன்றே யுடைய திருவள்ளுவர் சைவத்தின் வெளி யடையாளங்களான திருநீறுஞ் சிவமணியும் அணியாமல் வேறு எந்த மதத்தினடையாளத்தை அணியக்கூடும்? அரசன் தனக்குரிய அடையாளங்களாக மணிமுடிகவித்துச் செங்கோல் பிடித்தலும், அமைச்சன் தனக்குரிய அடையாளங்களாக அரசியல் நூல் கையேந்தியிருத்தலும், இல்லறத்தார் தமக்குரிய அடையாளங்களாக வெள்ளாடையுடுத்தி அணிகலன்களணிதலும், துறவறத்தார் காவியாடையுடுத்து முக்கோலேந்துதலுஞ் சைவப் பெரியார் திருநீறுஞ் சிவமணியும் அணிந்து சடை வளர்த்தலும், பழைய காலத்திலிருந்தே நடந்து வருகின்றன. மற்றைச் சமயத்தாரிலும் அவர்க்குரிய அடையாளங்களாக உள்ளவை எத்தனையோ பல. இவ்வடையாளங்களை யெல்லாம் எடுத்துவிட்டுப் பிறந்த வடிவத்தோடு இருக்க வேண்டுமென்று ஒருவர் எண்ணுவாராஞல், எல்லாரும் அம்மணமாகத்தான் இருக்கவேண்டும். அந்நிலைக்கு மற்றையவர்கள் தாந்தாங்கொண்ட அடையாளங்களை விடாதிருக்கையிற் சைவர்களுக்கு மட்டும் ஒருவர் அறிவு சொல்ல வருவதற்குச் சைவர்கள் தாமா இளைத்தவர்கள்? அது நிற்க.

கடவுளை நெருப்புருவில் வைத்து வணங்கி, அந்நெருப்பிஞல் உள்ளும் வெளியுமுள்ள அழுக்குகள் எரிக்கப்பட்டுத் தூய்மையாவதற்கு அடையாளமாகவே திருநீற்றைச் சைவர்கள் அணிகின்றூர்கள். அத்திருநீற்றைக் கையிலெடுக்கும்போது இறைவன் எல்லா அழுக்குகளையும் எரித்துத் தூய்மை செய்கின்றூன் என்னும் நினைவு எமக்கு வருதலால் அதனை அந்நினைவுக்கு அடையாளமாகப் பூசுவது குற்றமாகுமா? உலக நினைவிலேயே இழுப்புண்ணும் எமது உள்ளத்துக்குக் கடவுள் நினைவை எமக்கு உண்டுபண்ணும் இவ்வடையாளங்களுந் திருக்கோயில்களுஞ் சிறந்தன வல்லவா? தாழ்ந்த எண்ணங்களை உண்டு பண்ணும் அடையாளங்களாகிய கள்ளுக்கடை, கஞ்சாக்கடை, இறைச்சிக்கடை முதலானவைகளையும் இறுமாப்புக்கு இடஞ்செய்யும் ஆடையணிகலன்களையும் நீக்குவது பொருந்தும். ஆஞல், உலக நிலையாமையினையுங் கடவுள் அருள் நிலையினையும் நினைவுக்குக் கொண்டுவருந் திருநீறு முதலியவைகளை நீக்குதலால் மக்களடையும் பயனென்ன? இவ்வடையாளங்களை நீக்கினவுடனே எல்லா மதங்களும் எல்லாக்கொள்கைகளும் ஒன்ருகிவிடுமா? என்று தாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

திருவள்ளுவரின் திருவுருவமானது சைவ அடையாளங்கள் உடையதாக மைலாப்பூர் திருவள்ளுவர் கோயிலிற் பழைய காலத்திலேயே அமைத்துவைக்கப்பட்டிருந்ததால், அதனை அப்படியே ஓவியமெடுத்து அதனால் அவரை நினைந்து வணங்கும் எம்மனோரை ஒருவர் குற்றஞ் சொல்வது பொருந்துமோ? நாங்களே புதிதாக அச்சைவ கோலத்தை அத்திருவுருவத்திற்கு அமைத்திருந்தாலன்றோ எங்கள்மீது குற்றஞ் சுமத்தலாம்? ஆனாற் பழைய நாளிலேயே அமைக்கப் பட்ட அதனை அப்படியேவைத்து வணங்கும் எம்மனோரைப் பழித்தல் அடாது. சைவ அடையாளங்களை விட்டாலுந் திருவள்ளுவர் சைவரேயாவர். வெளிக்கோலத்தைப்பற்றி எங்களுக்கு அக்கரையில்லை. கொள்கையே பெரிது. எங்கள் சைவப் பெரியாராகிய சேக்கிழார் அடிகளே "எந்நெறியில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னியசீர்ச்சங்கரன்றாள் மறவாமை பொருள்" என்று எங்களுக்கு அறிவு புகட்டியிருப்பதை, நாங்கள் மறந்தவர்களல்லேம். அது நிற்க,

இனித், தமிழைச் சைவப்பசை கொண்டு ஒட்டியிருப்பதைப் புய்த்துவிட வேண்டுமென்று சொல்லுகின்றனர். புய்த்துவிட்டாற் புத்தர் சமணர் முதலான எல்லாரிடத்துந் தமிழன்னை துள்ளிக் குதிப்பாளென்று கிளர்ச்சியோடு எழுதுகின்றனர். ஆனால், தமிழ் மொழியினுண்மையோ அதனை வழங்கி வளர்த்த தமிழ் மக்களின் கொள்கையாகிய சைவத்தைத் தனக்கு உயிராய்க் கொண்டு உலவுகின்றது. அவ்வுயிரைப் போக்கி விட்டால் தமிழ் துள்ளிக் குதிப்பதெங்ஙனம்? பண்டைக் காலந் தொடங்கித் தமிழை வழங்கினவர்களும், வளர்த்தவர்களும் சைவர்களேயல்லாமல் மற்றைய மதத்தவர்களல்லர். இடைக்காலத்து வந்த புத்தர் சமணர்கள் தமிழைக் கைக்கொண்டது தம் கொள்கைகளை அதிற் புகுத்தவேயல்லாமல் வேறன்று; கிறிஸ்துவ, முகமதியருந் தமிழைக் கையாளுவது அதில் தமது கொள்கையைப் புகுத்தவேயல்லாமல் வேறன்று. தன்மதிப்பியக்கத்தாராகி ஒருவர் அதனைக் கையாள்வதும் அவர் கொள்கையை அதிற் புகுத்தவேயல்லாமல் வேறன்று. இவைகளையெல்லாம் அவர் சிறிதாயினும் நினைத்துப் பார்ப்பாரானால் மொழியானது அம்மொழியை வழங்கும் மக்களின் கொள்கைகளை விட்டுத் தனித்து நடவாதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். பிற்காலத்திற் புதியபுதியவாகத் தமிழிற்புகும் கொள்கைகளெல்லாம் தமிழுக்கு உரியனவுமல்ல; தமிழை வளர்க்க வந்தனவுமல்ல. அவைகளெல்லாம் தமிழை வளர்க்க வந்தன

வல்லவென்பதற்கு அக்கொள்கையினையுடையார் வடமொழி முதலான பிறமொழிச் சொற்களை அதனுள் வரைதுறையின்றிப் புகுத்தி, ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை வழங்க விடாமற் செய்த கொடுமையால் நன்றாக அறியலாம். மற்றுத் தமிழுக்கேயுரிய தமிழ் மக்கள் சைவர்களாயிருந்தமையால் அவர்கள் அதனைத் தூயதாகவே வழங்கி வளர்த்து வந்திருக்கின்றார்கள். அதனாற் சைவக் கொள்கையானது தமிழுக்கு உயிர்போல்வதென்பதும், அதனை அதிலிருந்து பிரித்தல் இயலாதென்பதும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

ஒருவர் உண்மையிலேயே தமிழை வளர்க்கும் எண்ணமுடையவர்களாயிருந்தால், மக்கட் கூட்டம், மக்களினம், மக்கள் தொகுதி முதலான தமிழ்ச்சொற்களிருப்ப அவற்றையெல்லாம் விட்டு "மனித சமூகம்" என்ற வடசொல்லை எழுதுவாரா? கடலூர் வாணர் என்னுந் தமிழ்ச்சொல்லிருக்கக் 'கடலூர்வாசி" என்று எழுதுகின்றனர். விடையென்னுந் தமிழிருக்கப், "பதில்" என்னுந் துலுக்குச் சொல்லை வரைகின்றனர். அவா, ஆவல், விருப்பம் என்னுந் தமிழ்ச்சொற்களிருப்ப அவற்றை விட்டு "ஆசை" என்றும், மொழி, சொல், கட்டாயம், ஒலி, ஓசை, மொழி, அறிவு நூல், கலைநூல், புலவர், அறிஞர், கற்றூர், நேரம், உதவி, பொருள், திருநீறு, சிவமணி, எல்லாம், ஓவியம், முறை, ஒழுங்கு, சிறிது, நினைத்து, சூழ்ந்து, ஆராய்ந்து, அன்பு, மகன், ஆண்மகன், ஆடவன், ஆள், முதன்மை, வலம்வருதல், வணக்கம், செலுத்துதல் என்னுந் தூய தமிழ்ச் சொற்களிருப்ப, இவற்றையெல்லாம் விடுத்துப், பதம், வாக்கு, வார்த்தை, அவசியம், சப்தம், பாஷை, விஞ்ஞானம், பண்டிதர், சமயம், உப, விஷயம், விபூதி, உருத்ராட்சம், சகலம், படம், நியாயம், கிரமம், கொஞ்சம், யோசித்து, தயவு, மனிதன், முக்கியம், திக்குவிஜயம், தண்டம், சமர்ப்பித்தல் முதலான வடசொற்களைக் கலந்து எழுதுகின்றனர். தமிழ்ச்சொற்களை வெட்டி வீழ்த்தி வடசொற்களைக் கொண்டுவந்து விதைப்பது தானா தமிழை வளர்ப்பது? நன்றாக எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

# திருவள்ளுவர் சமயம்

[தூத்துக்குடி போ. முத்தையா பிள்ளை அவர்கள்]

திருக்குறளாசிரியராகிய திருவள்ளுவரை ஜைனர், பௌத்தர், வைணவர், சைவராகிய ஒவ்வொருவரும் தத்தஞ் சமயத்தினரென்றும், வேறு சிலர் அவர் ஒரு சமயத்தையும் சார்ந்தவரல்லரென்றும் கூறுவர். இவ்வாறு கூறுதற்குக் கடவுளைச் சமயத்தார் இட்டுவழங்கும் சிறப்புப்பெயராற் கூறுது பொதுப்பெயரானும் இலக்கணவகையானும் கூறியிருத்தலே காரணமாகும். ஆயினும், எந்தச் சமயத்தினரென்று நிச்சயிப்பதற்கு அவர் வழிகாட்டாமலுமில்லை. அவ்வழியைக் கண்டுபிடித்து முடிவுகூறுதலே இக்கட்டுரையின் கருத்தாகும்.

யாதானும் ஒரு சமயத்தைச் சார்ந்து நின்று அச்சமயக் கடவுளை வழிபட்டாலன்றி, மக்கட் பிறவியைப் பெற்றதனுலாயபயனை அடைதல்கூடாது. ஆதலின், ஒரு சமயத்தையுஞ் சார்ந்தவரல்லரென்பார் கூற்று பொருந்தாது. ஒருவனை நாயகனுகக்கொண்ட நாயகி, ஏனைய புருடர்களை சகோதரராகக் கொள்ளுமாறு போல, ஒரு சமயத்தைச் சார்ந்து நிற்பவரும் ஏனைய சமயங்களை இகழ்ந்திடாமல் ஏற்றுப் போற்றுதலே முறையாகும். ஆனால் பலசமய நூல்கள் பிறசமயங்களைத் தாழ்த்தியும் தம் சமயத்தை உயர்த்தியும் கூறுகின்றன. அவ்வாறுயின், உண்மையான உயர்ந்த சமயம் யாதென ஆராயப் புகுவார்க்கு இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி நீதியினுல் இவை எல்லாம் ஓரிடத்தே காணநின்றது யாதொரு சமயம் அதுசமயமெனப் பெரியார் கூறியுள்ளார். திருவள்ளுவர், அத்துணைப் பெருமைவாய்ந்த சமயத்தினராதலின், எல்லாச் சமயத்தினரும் தத்தஞ் சமயத்தினரென்று பாராட்டிப் போற்றும் வண்ணம் கடவுள்வாழ்த்துக் கூறினர்.

இனி, திருவள்ளுவர் எச்சமயத்தினரென்பதைப் பற்றி ஆராய்வாம். ஒரு சமயத்தின் கொள்கை முற்றும் இருக்கவேண்டுமென்பதில்லை; சில இருப்பினும் அமையுட். ஆனல் அந்தச் சமயத்தின் கொள்கைகளுள் சில மறுக்கப்படினும், குறளில் கூறப்பட்ட கொள்கைகளுள் யாதானுமொன்று ஒரு சமயத்தில் இல்லையெனினும் அந்தச் சமயத்தினராகக் கொள்ளுதல் பொருந்தாது.

திருக்குறள் கடவுள் வாழ்த்தில் பகவன், வாலறிவன், மலர்மிசை யேகினன், வேண்டுதல் வேண்டாமையிலான்,

இறைவன், பொறிவாயிலைந்தவித்தான், தனக்குவமை யில்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தானெனக் கடவுட் பெயர் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் பகவனென்பது பொதுப்பெயர். வாலறிவன் என்பது முதல் அறவாழி அந்தணன் என்பதீறாக வுள்ளபெயர்கள் இலக்கண வகையால் எல்லாச் சமயத்தினர்க்கும் பொதுவாகும். ஆதலின் ஒவ்வொருவரும் தத்தஞ் சமயத்தின ரென்று கூறலாம்.

சைனருக்கு உலகம் ஒருவனால் படைக்கப்பட்டதென்பதும், பிரமசரியமுதலிய நான்கு நிலைகளும் உடன்பாடில்லை.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டில் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

என்னுங் குறள்களால் உலகத்தைப் படைத்தவன் உண்டென்பதும், நான்கு நிலைகள் உண்டென்பதும் விளங்குதலால் சைனரல்லர்.

பௌத்தருக்கு ஐந்துபூதங்கள் உடன்பாடில்லை.

வஞ்சமனத்தான் படிற் றொழுக்கம் பூதங்க
ளைந்தும் அகத்தே நகும்,

என்பதனால் பௌத்தரு மல்லர்.

வைணவ சமய நூல்களில் கடவுள் எண்குண முடையானென்பது கூறப்பட வில்லை.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

என்பதனால் வைணவரு மல்லர்.

முடிவான சமயக்கடவுளின் சிறப்புக்குணம் எண் குணமென்பது அறிவித்தற் பொருட்டே அதனை இறுதியிற் கூறினரென்பது கவனிக்கத் தக்கது.

எண்குணத்துளோனே, எண்குணம் செய்த ஈசனே, எட்டுவான் குணத்தீசன் என்பன வாதியாக சைவசமயத்திற்றான் கடவுளுக்கு எண்குணம் உடைமை கூறப்பட்டிருக்கிறது. வைணவ நூலைப் பல இடங்களில்மேற்கோளாகக்காட்டிய உரை

யாசிரியர் பரிமேலழகரும், எண்குணத்தின் பெயரை எடுத்துக்காட்டி இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டன என்றனர். வைணவ நூலில் கடவுளுக்கு எண்குணம் உடைமை கூறப்பட்டிருப்பின் அவர் கூறுதுவிடார்.

உயிருக்குச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை உண்டென்பதும், சாரப்படும் பொருள் கடவுளும் கட்டுமே யென்பதும், கடவுளோடுள்ள சார்பு எக்காலத்தும் பிரிக்க முடியாததென்பதும், கட்டோடு உள்ளசார்பு ஒருகாலத்தில் பிரிக்க முடியுமென்பதும், பிரிக்க முடியாதிருத்தலை உணர்தலே கடவுளை அடைதலென்பதும் சைவசமயத்தினுள்ள சிறப்பான கொள்கைகள். இவ்வுண்மைகளை,

'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரு நோய்,' என்னும் ஒரு குறளால் அறிவுறுத்துகின்றனர். எவ்வாறெனின், கூறுதும்.

சார்புணர்ந்து சார்புகெட என்றமையால் உயிர் யாதானுமொன்றனைச் சார்ந்து நிற்றலேயன்றித் தனித்து நிற்றலில்லை என்பதும், உணர்ந்து என்பதனால் கடவுளோடுடைய சார்பு பிரிக்க முடியாதென்பதும், பிரிக்கமுடியாமையை உணர்தலே அடைதலென்பதும், கெட என்பதனால் கட்டோடு உடைய சார்பு பிரிக்கப்படுமென்பதும் விளங்கினமை காண்க.

ஆகவே, கடவுளுக்கு எண்குணம் உடைமையினையும், உயிருக்குச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையினையும் கூறுதலானும், சாரப்படும் பொருள்களும் சார்பின் வேற்றுமையும் கூறுதலானும், திருவள்ளுவர் சமயம் சைவசமயமே ஆகும்.

சைவ சமயந்தான், ஏனைய சமயங்களெல்லாவற்றையும் தனக்கு அங்கமாகக் கொண்டு இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண இராஜாங்கத்தமர்ந்து நிற்கும் சிறப்பு வாய்ந்தது. இச்சமயக் கடவுளே திருவள்ளுவருக்கு வழிபடு கடவுளாகும்.

ஆயினும், எச்சமயத்தினரும் ஏற்றுப் போற்றி உய்யும் வண்ணம் கடவுட்பெயரைச் சிறப்பாக எடுத்துக்கூறுது இலக்கணவகையாற் கூறி நூல்செய்தனர். நூலிலே கூறப்பட்டவை அறம், பொருள், இன்பம் என மூன்று. வீடு இலக்கணவகையாற்கூற இயலாததலின் சாதனவகையால் துறவறத்துட் கூறப்பட்டது.

அறத்துக்கு விட்டுணுவும், பொருளுக்குப் பிரமனும், இன்பத்துக்கு உருத்திரனும் அதிதெய்வங்க ளாகுமாதலின், இம் மூவரையும் வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கின் எச் சமயத்தினரும் ஏற்றுக்கொள்ளா ரென்பது கருதி, மூவ ராகவும் மூவருக்கு முதல்வராகவு முள்ள ஒரு கடவுளை இலக் கண வகையால் வணங்கினார். ஆதலின் இவர் கூறிய கடவுள் வாழ்த்து வழிபடுகடவுள் வாழ்த்தாதலோடு ஏற்புடைக் கட வுள் வாழ்த்துமாயிற்று. வாழ்த்தப்பட்ட கடவுள் முதற் கடவுள் என்பது அறிவித்தற்கு ஆதிபகவன் என அடை கொடுத்தோதினார். மூவருக்கு முதலாக ஒரு கடவுள் உண் டென்பது உணர்ந்து அக் கடவுளை வழிபடும் திறனுடையரா யிருந்தாலன்றி நூலில் அக்கடவுள் வழிபாடு கூறாரென்பது கடைப்பிடிக்க.

இவ்வாறு கடவுளைவாழ்த்திப் பொதுவாயும் சிறப்பாயும் உள்ள தருமங்களைக் கூறி உபகரித்தாராகலின், எல்லா நாட்டி னரும் எல்லாச் சமயத்தினரும் ஏற்றுப்போற்றிக் கொள்ளும் பெருமைவாய்ந்துள்ளது திருக்குறள்.

இத்துணைப் பெருமை வாய்ந்த திருக்குறளை அருளிச் செய்து உபகரித்த பெரியாராகிய திருவள்ளுவ தேவரை சம யப் பிணக்கின்றி எல்லாச் சமயத்தினரும் பாராட்டி வழிபடு தலே கடமையாகும்.

திருவள்ளுவ தேவர் திருவடிவாழ்க.

---

ஹட்கின்ஸன் பிரபுவின் தலைமையின்கீழ் எகுபதி (Egypt) யின்மீது படையெடுத்துச் சென்ற இந்திய சிப்பாய்கள் ஹாட்ஜா வில்விலி என்ற ஊரிலுள்ள ஒரு பாழடைந்த கோயிலைக் கண்டவுடன் அது சிவன் கோயிலே என நம்பி, அக்கோயிலை அவ்வாறு பாழடைய விட்டமை நோக்கி அவ்வூர் மக்களைச் சினந்தனராம். எகுபதியின் கடவுளர் கள்.—ஓசிரிஸ்-பிரமா; ஹோரஸ்-விட்டுணு; டைஃபன்- சிவன்; ஈஸிஸ்-பார்வதி.

—தாமஸ் இன்மன் எம். டி.,




## சிவஞானபோதக் கருத்து

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ.]

பதிப்புரிமை ஆக்கியோற்குரியது

(முன் கருச-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நான்காவது சூத்திரம் இரண்டாவது அதிகரணம்

34. மேலே, அறிவு இன்மையே (ஞானபாவமே) அறியாமைக்குக் காரணம், ஆணவமலம் என்பதொரு பொருள் மிகையாம் என்பார் கொள்கையும் மாயையே ஆன்மாவின் அறிவை மறைத்தற்கு அமையும், ஆணவமலம் மிகையாம் என்பார் கொள்கையு மறுக்கப்பட்டன. இன்னும் ஒரு சாரார் (ஏகான்மவாதி முதலியோர்) பிராந்திஞானமே ஆன்மாவுக்கு அறியாமையைச் செய்யும், ஆணவமல மென்பதொரு பொருள் மிகையாம் என்று கூறுவர். பிராந்திஞானம் என்பது கயிற்றைப் பாம்பு எனக் காணுதல்போல ஆன்மா, தானல்லாத உடலைத்தான் எனவும் நிலையில்லாத உலகவாழ்வை நிலைபேறுடையதெனவும், மயங்கி அறியும் மயக்க அறிவு. அம்மயக்க அறிவானது உண்மைப் பாம்பையும் உண்மைக் கயிற்றையும், முன் கண்டறிந்த ஒருவனே ஞாயிற்றினொளி மழுங்கின மாலை நேரத்தில் நீண்டு வளைந்து கிடக்கிற கயிறொன்றைக் கண்டபொழுது அக்கயிற்றை உண்மைப் பாம்பென மயங்கி அறிகின்றான்; உண்மைப் பாம்பை முன் கண்டறியாத ஒருவன் கயிற்றை உண்மைப் பாம்பென மயங்கி அறியான். இம்மயக்க அறிவு ஞாயிற்றினொளி மழுங்கின மாலை நேரத்திலே கண் பார்த்த காரணத்தினாலுண்டாயிற்று. அதுபோல உடலைப்பற்றியும் உலகைப்பற்றியும் உண்மை அறிவுடைய ஆன்மாவே அவ்வறிவு மறைக்கப்பட்டிருத்தலால் அவற்றைப்பற்றி மயக்க அறிவும் (பிராந்தி ஞானமும்) உடையதாயிருத்தல் வேண்டும். ஆதலின் ஆன்மாவின் உண்மை அறிவைக் கெடாதபடி மறைத்தற்குக் காரணமாய் ஆணவமலம் உண்டு என அறிக.

35. இன்னும் ஒரு சாரார் -தமோகுணமே ஆன்மாவின் அறியாமைக்குக் காரணம், ஆணவமலம் வேண்டப்படுவதில்லை என்று கூறுவர். அசுத்தமாயா கலையினின்று உண்டான மூலப்பகுதியானது சீகண்ட ருத்திரரால் கலக்கப்பட்ட பொழுது அதினின்றுங் குணதத்துவந் தோன்றியது. இந்தக் குணதத்துவம் தொழிற்படுங்கால் தாமதம், இராசதம், சாத்துவிகம் என மூன்று குணங்களாய்ப் பிரிகிறது. இம்மூன்று குணங்களாலாகிய மயக்கமானது பிரகிருதி மாயையின்கண் வைகும் ஆன்மாக்களுக்கன்றி பிரகிருதி மாயா தத்துவங்களுக்கு மேற்பட்ட அசுத்த மாயா தத்துவங்களின் வைகும் பிரளயாகல வருக்க ஆன்மாக்களுக்கும் அவர்களுக்கு மேற்பட்ட விஞ்ஞானகல வருக்க ஆன்மாக்களுக்குமில்லை. இங்ஙனம் பிரகிருதி மாயா தத்துவங்களின் உச்சியிலுள்ள மூலப்பகுதியின் காரியமாய் இடையே தோன்றி இடையே அழிவதாகிய மூன்று குணங்களிலொன்றாகிய தமோகுணமானது சுத்த மாயா தத்துவங்கள் வரை வியாபித்து மூவகை ஆன்மாக்களின் அறிவையும் மறைக்கின்ற ஆணவமலம் ஆகமாட்டாது. இடையே தோன்றிய தமோகுணம் தூயதான ஆன்மாவை இடையே கட்டுறுத்தி மயக்கும் என்னில் அவ்வாறு தமோகுணம் ஆன்மாவை இடையே கட்டுறுத்தற்கு ஒரு காரணம் வேண்டும்; ஒரு காரணமின்றி அஃது ஆன்மாவைக் கட்டுறுத்தும் என்னில் ஆன்மா வீடு பேறுபெற்ற பின்னும் அதனைக் கட்டுறுத்தும் என்று நாம் சொல்லல் வேண்டும்; அப்பொழுது வீடு பேறு என்பதே இல்லையாக முடியும். ஆதலின் தமோகுணமானது அநாதியே ஞானதிரோதகமாய் ஆன்மாவைக் கட்டுறுத்தும் என்பார் கொள்கை பொருந்தாது என அறிக.

36. இன்னும் ஒரு சாரார் (சாங்கியர் முதலியோர்) ஆன்மாவின் அறிவை மறைத்து மயக்குதற்கு அவிச்சையே காரணம், ஆணவமலம் என்பதோர் பொருள் காரணமாகக் கொள்ளுதல் மிகையாம் என்பர். அவிச்சை என்பது நிலையில்லாததை நிலையுள்ளது என்றும் தூய்மை இல்லாததைத் தூய்மை உடையது என்றும் தானல்லாத பொருளைத் தான் என்றும் திரிவுபடக் காணும் உணர்வாம். அது பஞ்சக்கிலேசங்களுளொன்றாய் ஏனைய நான்கு கிலேசங்களுக்கும் காரணமாய்ப் பிரகிருதி மாயாபோகங்களை ஆன்மாச் சிறப்பு வகையால் நுகர்தற்கு ஏதுவாயுள்ள பும்சத்துவமலம் என்று கூறப்படும். இந்த பும்சத்துவமலமும் மூலப்பகுதித் தத்துவத்திலிருந்து இடையே தோன்றி இடையே அழிவதாயுள்ளது. இது

பிரளயாகலர் விஞ்ஞானகலர் ஆன்மாக்களைக் கட்டுறுத்தாது. ஆதலின் மேலே தமோகுணம் ஆணவமலமாகாது என்பதற்குக் கூறப்பட்ட தடை உரைகள் இதற்கும் பொருந்தும் என அறிக.

37. ஒரு சாரார் சிவசத்தியானது ஞானதிரோதகமாய் நின்று ஆன்மாவைக் கட்டுறுத்தும் என்று கூறுவர். சித்துப் பொருளாகிய ஆன்மாவை அதற்குப் பகையாகிய சடப் பொருள் கட்டுறுத்துவதன்றி சித்துப்பொருளாகிய சிவசத்தி சித்து ஆகிய ஆன்மாவைக் கட்டுறுத்த மாட்டாது; அல்லதூஉம் அங்ஙனம் சிவசத்தி கட்டுறுத்தும் என்று கூறுதல் இறைவனது பெருங்கருணைக்கு இழுக்காய் முடியும், ஆதலின் சடப்பொருளாய் ஆன்மாவை அநாதியே கட்டுறுத்தும் ஆணவமலம் வேறாயுண்டு என்பது பெறப்படும்.

38. ஒரு சாரார் ஆணவமலம் சகசமலமாய் ஆன்மாவோடு அநாதியே உடனிற்றலின், ஆன்மாவின் குணம் என்று கூறுவர். ஆன்மாவினது குணம் அறிவு என்பது முன்னே மூன்றாவது சூத்திரத்திற் கூறப்பட்டது. அறியாமையைச் செய்யும் ஆணவமலமும் அறிவும் ஆகிய இரண்டு மறுதலைக் குணங்கள் ஒரு பொருட்குக் கூடாது. மேலும் ஆணவமலம் ஆன்மாவின் குணமாயின் அதன் சத்தி இடையே அழியும் என்றல் கூடாது. ஆணவமலசத்தி இடையே அழியாதாயின் ஆன்மாவுக்கு வீடுபேறு இல்லையாக முடியும் ஆதலின் ஆணவமலம் ஆன்மாவின் குணம் என்றல் பொருந்தாது.

39. ஆணவமலமே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று வகை உயிர்ப் பாகுபாடுகளுக்குக் காரணமாயுள்ளது. சகசமலமாகிய ஆணவமல நீக்கத்தின் பொருட்டே உயிருக்கு (ஆன்மாவுக்கு) மாயை மலமும் வினை மலமும் (கன்மமலமும்) ஆகந்துக மலங்களாக இறைவனாற் கூட்டப்பட்டனஎன்பது மேலே கூறப்பட்டது. ஆணவம், வினை, மாயை மலங்கள் மூன்றினையுமுடையவர் சகலர். சகலர் என்ற சொல் கலைகளோடு கூடியவர் என்று பொருள்படும். கலை அத்துவா, அதற்குக் கீழேயுள்ள தத்துவம், புவனம், மந்திரம், பதம், வர்ணம் என்னும் அஞ்சு அத்துவாக்களிலும் நிறைந்து அவற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருத்தலால் கலை என்ற சொல் எல்லா அத்துவாக்களாலும் உயிர்களுக்கு உண்டாகிற கட்டினை (பந்தத்தை)க் குறிக்கும். ஆகவே எல்லா அத்துவாக்களாலு முண்டாகிற கட்டினையுடையவர் சகலர் ஆவார். பிரளயாகலர் என்ற சொல் பிரளயம் அகலர் என்ற

256



இரண்டு தனிச்சொற்களா லாக்கப்பட்டுப் பிரளய காலத்தில் அதாவது உயிர்களெல்லாம் ஒடுங்கி நிற்கிற சங்கார காலத்தில் கலை அற்றவர் என்று பொருள்படும். சகலர்க்கு உரியன போல அவர்களுக்கு முக்குணங்களால் உண்டாகும் மயக்க மில்லை. விஞ்ஞானகலர் என்ற கூட்டுச்சொல் விஞ்ஞானம் (மேலான ஞானம்) அகலர் (கலைஅற்றவர்) என்ற தனிச் சொற்களாலாக்கப்பட்டு மேலான ஞானம் அதாவது பதி ஞானத்தால் கலைஅற்றவர் என்று பொருள்படும். வடமொழிச் சந்தி இலக்கணப்படி விஞ்ஞாநகலர் என்று கூறற்பாலது விஞ்ஞானகலர் என மரீஇயது. ஆணவமலத்தினது உண்மையை அறியாத சமயங்கள் மூவகை உயிர்ப் பாகுபாடுகளையும் அவ்வவ்வுயிர்களுக்கு உரிய சத்திநிபாத முதலிய இலக்கண வேறுபாடுகளையும் அவ்வுயிர்களுடைய பக்குவத்திற்கு ஏற்றவண்ணம் இறைவன் அருள்செய்யும் தீக்கை வேறுபாடுகளையும் பிற உண்மைகளையும் அறியமாட்டா.

40. ஆணவமலமே கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூவகைக் காரணாவத்தைகளுக்கும் காரணமா யமைந்துள்ளது. வண்ணானொருவன் அழுக்குப்பற்றிய ஆடைகளோடு பிறிதோர் அழுக்காகிய உவர்மண்ணைச் சேர்த்து வெள்ளாவியில் வைத்துத் துவைத்து ஆடையிலுள்ள அழுக்கை உவர்மண் அழுக்கோடு போக்கித் தூய்மை செய்தல்போல இறைவன், உயிர்கள்மேல் வைத்த பேரருளினால் ஆணவமல அழுக்குப் பற்றியுள்ள உயிர்களுக்கு மாயைவினை அழுக்குகளைக் கூட்டி தநுகரணங்களோடு கூடிய அவ்வுயிர்களைப் புவன போகங்களாகிய உலகில் வாழும்படி செய்து ஆணவமல அழுக்கை மாயை வினைமலங்களோடு போக்கித் தூய்மை செய்தபின், வீட்டின்பம் அளிக்கின்றான். இதனால் உயிர்கள் வீட்டின்பம் அடைதற்கு ஆணவமல சத்தியினின்று நீங்கிப் பக்குவப்படும் பொருட்டு உயிர்களுக்கு இத்துன்ப உலகவாழ்வு வந்தது என்ற உண்மை நன்கு தெளியப்படும். இங்ஙனம் இறைவன் உயிர்களுக்கு மாயைவினை மலங்களைக் கூட்டுதற்கு முன்னுள்ள அவத்தை கேவலாவத்தை என்றும், மாயை வினைமலங்களைக் கூட்டிய பின்புள்ள அவத்தை கலை முதலிய கருவிகளோடு கூடிய சகலாவத்தை என்றும், கருவிகளோடுகூடி உலகவாழ்வு வாழ்ந்து தூய்மை அடைந்த பின்னுள்ள கருவிகள் நீக்கிய நிலை சுத்தாவத்தை என்றுங் கூறப்படும். அவத்தை என்பது அறிவுநிலை (State of Consciousness) கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்ற மூன்று அவத்தைகளையும் முறையே தனிநிலை, கருவிநிலை, தூய்மைநிலை என்று நாம்

தமிழிற் கூறலாம். இந்த மூன்று காரணவத்தைபற்றி உயிர்களுக்கு உண்டாகின்ற சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து காரியாவத்தைகளும் ஆணவமல மறைப்பு நீக்கத்தின் பொருட்டே உண்டாகின்றன. இந்த ஐந்து காரியாவத்தைகளும் முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்று தமிழிற் கூறப்படும். இந்த ஐந்து அவத்தைகளும் மூன்றாவது அதிகரணத்தில் விரித்துக் கூறப்படும். ஆணவம் வினைமாயைகளால் எல்லாக் கட்டுக்களுடனுங் கூடிய சகலருக்கு ஒவ்வொரு காரணவத்தைக்கும் ஐந்து காரியாவத்தைகளாகப் பதினைந்து அவத்தை வேறுபாடுகளுள. (Different states of consciousness on account of the soul functioning in different Vehicles at different times). இந்த அவத்தை வேறுபாடுகளை எல்லாம் பிறசமயங்கள் அறியா; மேலைநாட்டு உளநூலாரும் (psychologists) அவற்றின் நுட்பங்களை அறியமாட்டார்.

41. மேலே கூறியவாற்றான் ஆணவமலமானது ஞானபாவம், மாயை, பிராந்திஞானம், தமோகுணம், அவிச்சை, சிவசத்தி ஆன்மாவின் குணம், ஆகிய இவற்றின் வேறாய் உயிரின் அறிவு வேட்கை செயல்களை அநாதியே மறைத்துக் கட்டுறுத்துவதாய் அறியாமைக் குணமுடையதாய் அநாதியே செம்பிற் களிம்புபோல ஆன்மாவைப்பற்றியுள்ள சகசமலமாய், சடமாய் ஒன்றாய் ஒன்றாயினும் ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை உயிர்ப்பாகுபாட்டிற்கு ஏதுவாய், நின்று மறைத்துத் தத்தங்கால எல்லையில் நீங்குமளவாகிய சத்திகள் பல உடையதாய், உயிர் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்றவத்தையுறுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், நிற்பதொரு பொருள் (திரவியம்) என்பது பெறப்படும். உயிரானது ஆணவமல மறைப்பினின்று நீங்கிப் பேரின்பத்தை அடையும் வழிகள் பின் உண்மை அதிகாரத்திற் கூறப்படும்.

42. உயிரின் அறிவை மறைத்துக் கட்டுறுத்துகிற ஆணவமலத்தினது உண்மையை அறியமாட்டாத சமயக்கொள்கையரும் தத்துவக் கொள்கையரும் அவ்வறியாமைபற்றி உயிரினது உண்மைத் தன்மையையும் நன்கு அறியமாட்டார். வைணவர் ஆகிய பாஞ்சராத்திரி முதலியோர், உயிரானது உடம்பினின்று நீங்கிப் போக்குவரவு புரிதலானும் உடம்பினுள்ளுஞ் சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளுறுதலானும் அணுவடிவுடையது என்று கூறுவர். அவர்தாம்

கூறும் கொள்கைக்கு "உயிர் இதயகமலத்தின் புன்றுளிச் சிறு வடிவினதாயிருக்கும்" என்று வேதம் கூறுதலை மேற்கோளாகக் கூறுவர். உயிர் அணுவடிவினதாயின் நாம் கண்கூடாகக் காணுகிறபடி அதற்கு ஏகதேசத்திலன்றி உடம்பு முழுவதும் அறிவு நிகழ்தலும் சேய்மைக்கண்ணதாகிய துருவ மண்டலத்தை அறிதலும் எங்ஙனம் கூடும்? என்று அவரைக் கேட்பின் விளக்கின் குணமாகிய விளக்கின் பிரபை விளக்கு அளவில் நில்லாது பக்கங்களிற் பரந்து சென்று வியாபித்திருத்தல் போல உயிர் ஏகதேசமாயினும் உயிரின் குணமாகிய அறிவு வியாபகமாகலின் அங்ஙனம் அறிதல்கூடும் என்று அவர் விடைகூறுவர். இவ்விடை உரையைக் கேட்ட ஆசிரியர் மறுபடியும் கூறுகிறதாவது.—விளக்கின் பிரபை விளக்கின் சூக்கும உருவமாகிய திரவியமே அன்றி அதன் குணமாகாது. விளக்கின் பிரபையைக் குணமென்று நாம் கொண்டாலும் அது விளக்காகிய குணி அளவினன்றி வேறிடத்துச் சென்று வியாபிக்குமாறு இல்லை. ஆதலின் விளக்கொளி உவமை பொருந்தாது. உயிரானது பெத்தகாலத்தில் அணு வடிவிற்றாகிய சூக்கும தேகமாய் நிற்குஞ் செயற்கைபற்றி அஃது இதயகமலத்தில் அணுவடிவினதாயுள்ளது என்று வேதம் கூறுகிறதே அன்றி உயிரின் இயல்புபற்றி அஃது அணு வடிவினது என்று கூறுகிறதில்லை. உயிர் தன் இயல்பில் வியாபகமுடைய பொருள் என்றே வேதம் கூறுகிறது. ஆகமமும் அவ்வாறே கூறுகிறது. ஆதலின் வேதம் கூறுவதாய்ச் சொன்ன மேற்கோளுஞ் பொருந்தாது. ஆன்மா என்ற சொற்குப் பொருள் வியாபகமாகிய நித்தசித்து என்பதே ஆகலானும் சேய்மைக் கண்ணும் வியாபித்து அறிவதாகிய உயிர் ஏகதேசமான அணுஅளவினது என்ற பாஞ்சராத்திரியர் கொள்கை பொருந்தாது.

43. ஆருகதர் உயிரினது அறிவானது உடம்பினிடத்தன்றி ஏனை இடங்களில் நிகழாமையால் உயிர் உடம்பு அளவில் வியாபகமாய் நிற்கும் என்று கூறுவர். உயிர் உடம்பினளவில் வியாபித்திருக்குமென்னில் அது யானை உடம்பில் யானை உடல்அளவு பெருத்தும், எறும்பு உடலில் எறும்பு உடல்அளவு சிறுத்தும், அவ்வாறே ஏனைய உடல்களிற் சிறுத்தும் பெருத்தும் உடலளவில் வியாபித்திருக்கும். அவ்வாறாயின் உயிரினது அறிவு தான் இருக்கும் உடலின் அளவு விரிந்தும் சுருங்கியும் விளங்குதல் வேண்டும். அப்படியல்லாமல் பேருடலில் சிற்றறிவும் சிற்றுடலில் பேரறிவும் விளங்கி நிகழ்தலை நாம் அநுபவத்தில் காண்கின்றோம். மேலும் அங்ஙு

னம் சுருங்கியும் விரிந்தும் விளங்குகிற அறிவு அவயவப் பகுப்புடைய உருவப்பொருளாதல் வேண்டும். உருவப் பொருள்களெல்லாம் அழிவு எய்துமாகலான் அவ்வறிவுடைய உயிரும் அழிவெய்தும் என்பதாக முடியும். உடம்பிலிருக்கிற மக்களுயிர் உடம்பினளவின்றி சேய்மைக் கண்ணேயிருக்கிற துருவ மண்டலத்தையும் அறிகின்றது. ஆதலின் உடம்பி னளவில் உயிர் வியாபித்து நிற்கும் என்ற கொள்கை பொருந் தாது என அறிக.

44. இன்னும் ஒரு சாரார் (நையாயிகர்) குணி நிற்பக் குணம் தோன்றி அழியும் என்று கொண்டு ஆகாயமானது நித்தமாய் வியாபகமாய் நிற்ப அதன் குணமாகிய சத்தம் தோன்றி அழிதல்போல, உயிரானது நித்தமாயும் வியாபக மாயும் தோற்றக் கேடின்றி நிற்பினும் அதன் குணமாகிய அறிவு ஏகதேசத்தன்மை உடையதாய்த் தோன்றி அழியும் இயல்புடையது என்று கூறுவர். இருளின் கண்ணுள்ள குடம் விளக்கினொளியுள்ள பொழுது விளங்கியும், விளக்கினொளி யில்லாதபொழுது விளங்காதும், நிற்றல்பற்றிக் குடம் தோன்றி அழிந்தது என்று நாம் கூறுவதில்லை. அதுபோல் ஆகாயத் தின் குணமாகிய சத்தமும் அதனை விளக்குதற்குரிய காரண முயற்சிகள் கூடியபொழுது விளங்கியும் கூடாதபொழுது அச் சத்த குணம் ஆகாயத்தில் அடங்கி விளங்காதும் நிற்றல் மாத் திரையே யன்றி அழிதலில்லை. குணிநிற்பக் குணந்தோன்றி அழிவது எவ்விடத்துமில்லை. தன் இயல்பில் நித்தமாயும் வியாபகமாயும் தோற்றக்கேடின்றி நிற்கும் உயிரின் குண மாகிய அறிவு ஒருகால் விளங்கியும், ஒருகால் விளங்காதும், இடத்தாலும் காலத்தாலும் ஏகதேசப்பட்டு நிகழ்தல் செயற் கையால் ஆகியது. அச்செயற்கைக்குக் காரணம் ஆணவமல மறைப்பு ஆகும். ஆதலின் உயிரானது நித்தமாயும் வியாபக மாயும் நிற்ப உயிரின் அறிவானது நித்தமாயும் வியாபகமாயும் விளங்காது தோன்றி அழியும் என்ற நையாயிகர் கொள்கை பொருந்தாது.

200

## அறிவியற் பகுதி - Science

# வடிவுதிருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—திரு. க. ப. சந்தோஷம்]

(முன் கசாய-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களி னுதவியால் உயிரின் வடிவம் கீழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு ஏற, ஏற, எங்ஙனம் வேறுபடலாமென்பதை விளக்க முயன்றிருக்கின்றேன். கணக்கியலினும் அதையொத்தவேறு அறிவியல் துறைகளிலும், கண்டதிலிருந்து காணுததைப் பெறுகின்ற முறையே பொதுவாக எடுத்தாளப்படுகின்றது. முந்திய சொற்பொழிவில் தமிழர்கள் கடவுளை அறிவு மயமாகக் கருதினர்களென்று மொழிந்தேன். இப்பொழுது கடவுளுக்குக் கைகளுந் தலைகளும் பல உண்டென்றதுடன், தலைகளுள் ஒன்று விசும்பிற்கு நேரே பார்வையுடையதாய் அமைந்திருக்கின்றதென்றும் பகர்ந்தேன். கண்டதிலிருந்து காணுததை அறியும் முறையைத் தழுவித் தமிழர்கள் கடவுளின் பண்புகளையும் பிறவற்றையும் அமைத்திருக்கும் வகையைச் சீர்தூக்கிப்பார்த்து, அவர்களுடைய கருத்துக்கள் அறிவியலுக்கு முரண்படாவண்ணம் வடிக்கப்பட்டுள்ளனவென்று காண்கின்றேன். இவைகளெல்லாம் சைவசித்தாந்தக் கொள்கையிற் காணக்கிடக்கின்ற உயிர் வளர்ச்சி முறையை யொட்டியனவாம். இச்சைவசித்தாந்தக் கொள்கை அறிவியலாகிய உரைகல்லுக்கு நிற்கும். பிற கொள்கைகள் இதுபோல் நில்லா. மற்றக் கொள்கைகள் இத்துறையிற் குறையுடையனவென்று நான் கூற முற்படவில்லை. அவைகளைப்பற்றி யான் விரிந்த அறிவுடையவனல்லன். பிற கொள்கைகளைவிடச் சைவ சித்தாந்தத்தை நான் நன்கறிந்திருக்கின்றேன் என்பதுபற்றியே இவ்வாராய்ச்சி எழுந்தது. மற்றக் கொள்கைகளில் அழுந்தியவர் அவற்றி லாராய்ச்சியைப் புகுத்தி அறிவியல்முறைக்கவை ஒத்தனவென்று காட்டுவரேல் அதுவும் நன்மை தரக்கூடியதேயாகும்.

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறிவா ரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர் களேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே.

ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே. —**திருமந்திரம்.**

இன்று இவ்விரண்டு நவிற்சிகளையும் எடுத்தாராய்வது போதும். இவற்றிற் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்கொண்டு உயிரின் வளர்ச்சியைப் பற்றி நாமறியத்தக்க உண்மைகள் அதிலுளவோ வென்று பார்ப்பது நமது கடமை.

உரு, அரு என்பதை மட்டும் எடுத்துக்கொள்வோம். இது கண்ணிற் கெட்டினவற்றையும் எட்டாவற்றையுங் குறிக்கின்றது. ஓங்காரத்தின் விளக்கங்கூறும் நூல்கள் பல உள. இவைகளிற் பலவற்றை நாம் படித்திருக்கின்றோம். ஆனால், அவற்றால் குறிக்கப்படும் பொருளை நாம் மெய்ப்பித்துப் பார்க்கவில்லை. வடிவங்கள் பலவற்றுள் ஓங்காரத்தினின்று மெழுகின்ற சிலவற்றைப் பார்ப்போம். இதில் அடிப்படையானவை உண்மையாயிருப்பின் பலவற்றை அறிவது எளிதாகும். ஐரோப்பியர்களால் எழுதப்பட்ட உயிர் வளர்ச்சி நூல்களை நான் படித்தபொழுது, அவர்கள் தங்கள் நூல்களில் உயிர்களின் பல வடிவங்களுக்குள்ள ஒற்றுமையைக் காட்டும் பொருட்டு, வெவ்வேறு உயிர்களின் கரு நிலையைப் படங்களால் விளக்கிக் காட்டியிருப்பதைப் பார்த்து வியப்புற்றேன்.




ஈண்டு நான் கருப்பையில் முதிராக் குழவியின் படமொன்றை வரைந்திருக்கின்றேன். பாம்பு, மீன், பறவை, விலங்கு ஆகிய எல்லா உயிர்களின் கருநிலையும், கருப்பையிலுள்ள முதிரா மக்கட் கருவும் ஒரே வடிவுடையனவாயிருக்கின்றன. முட்டையில் தோன்றும் கருவிற்கும் பையில் தோன்றும் கருவிற்கும் வேற்றுமையே இல்லை. இங்கு நாம் சிறப்பாய்க் கருதவேண்டியது யாவையெனின், முதிராக் கருவின்

கழுத்திலே தோன்றுகின்ற மடிப்புகளேயாம். எக்கருவாயிருப்பினுஞ் சரி, அதிலுள்ள மடிப்புகள் ஐந்தே என்பது உற்று நோக்கத்தக்கது. ஆயிரத்தில் ஒன்று ஆறு மடிப்புடையதாயிருக்கலாம். பொதுவாக நஞ்சுடன் (Placenta) சேர்த்து ஐந்து மடிப்புகளே தோன்றுகின்றன. கருவினுருவும் ஓங்காரத்தின் வடிவமாகும். இஃதொரு வியத்தகும் ஒற்றுமையன்றோ? இப்பொழுது ஐந்து மடிப்புகளையும் பிரித்துணரும்பொருட்டு அவற்றிற்கு ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்களை அடையாளமாகக் கொடுப்போம். எல்லாஞ்சேர்ந்து ஓங்கார வடிவமாயிருக்கின்ற தென்பதை நினைவில் வைத்துக் கொள்வோம். யோகப் பயிற்சியில் அடியிலிருந்து இடுப்பு வரையுள்ள உடற்பகுதி நகார மெனப்படுகின்றது. இடுப்பிலிருந்து நெஞ்சுவரையுள்ள பகுதி மகார மெனப்படுகின்றது. நெஞ்சிலிருந்து நாடிவரை சிகாரமாம். (நாடியிலிருந்து மூக்கு வரை வகாரமாம்.) இதிலிருந்து உச்சந்தலைவரையிலுள்ளது யகாரமாம். வாஸ்து புருஷர் அல்லது விராட்புருஷர் என்பது இந்த வகுப்பைத் தழுவியதேயாம்.



பதினெண்சித்தர்பாடல் என்று கூறப்படுந் தமிழ்யோக நூலில் யாண்டுங் காணக்கிடக்கும் ஓர் உண்மையாகும் இது. இந்நூலில் நகரம் பிருதிவி என்றும், மகரம் அப்பு என்றும், சிகரம் தேயுவென்றும், வகரம் வாயுவென்றும், யகரம் ஆகாசமென்றும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த

உடலின் வகுப்பு திருத்தமுடையதுதானே என்பதைச் சிறிது நோக்குவோம். இடுப்பிற்குக் கீழேயுள்ள கால்கள் பிருதிவியின் இறுகிய தன்மையுடையனவென்பது யாவருங் காணக் கூடியது. இப்பகுதியில் வேறு பூதங்களின் சேர்க்கை மிகக் குறைவு. நகரப்பகுதியின்மேலே நெஞ்சுவரையிலுள்ள பாகம் மகாரமாகின்றது. இங்கே நீர்மிகுந்து காணப்படுகின்றது. இதற்குமேலே கழுத்தளவுமுள்ள பகுதி தீயின் தன்மை வாய்ந்தசிகாரமாகின்றது. இங்கே உடலிற்கு வெப்பந்தருகின்ற கருவிகள் இடம்பெற்றிருக்கின்றன. இதற்குமேல் காற்றை உள் வாங்கி விடுகின்ற கருவிகள் அமைந்திருக்கும் பகுதி வகாரமாகின்றது. இறுதியில் யாவற்றிற்கும் மேலிருக்கின்ற ஆகாசத் தன்மையுடையதாகிய மூளை யகாரமாகின்றது. இவ்வமைப்பின் கருத்து உடலில் மாத்திரமன்றி மற்றெல்லாவற்றிலு மிருப்பதைக் காணலாம்.

ஈண்டுக் கூறியவை யெல்லாம் தமிழர்களின் விரிந்த ஞான நூல்களில் பரவிக் கிடக்கின்றன. இவை இக்காலத்துக் கல்வி பெற்றவர்கள் உணர்ந்துகொள்ளும் வகையிற் கூறப்பட்டிருக்கவில்லை. இதுபற்றி யாரையும் நோவதிற் பயனில்லை. நாம் மேலை நாட்டாருடைய முறைகளுக்கேற்றவாறு கல்விப் பயிற்சி யடைந்திருக்கின்றோம். அவர்கள் தம்மாற்கூடிய அளவு கல்வியை நமக்கு ஊட்டியிருக்கின்றனர்.

நமசிவய என்று நம்மாற் பெயரிடப்பட்ட ஐந்து மடிப்புக்கள் கருவில் எங்ஙனம் வளர்ந்து வேற்றுமையடைகின்றனவென்பதைப் பார்ப்போம். நாளுக்கு நாள் கிழமைக்குக் கிழமை முதிராக் கருவளர்ச்சி யடைந்து கொண்டே வருகிறது. அந்த வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு மடிப்பு மறைந்து போகின்றது. ந என்று குறிக்கப்பட்ட மடிப்பு நீங்கும்பொழுது கருவின் கால்கள் தோன்றுகின்றன. இந்த நிலையில் குலை, கை முதலியவை தனியுருப்புக்களாய் விளங்குவதில்லை. இதற்கடுத்த நிலையில் மற்றொரு மடிப்பு மறைகின்றது. இங்ஙனம் எல்லா மடிப்புகளும் நீங்கியபின், கரு முற்றுப்பெற்றுத் தீர்ந்த வடிவமுடையதாகின்றது. மக்கட் குழவியாயினும், பறவை, மீன், பாம்பு முதலியவற்றின் குஞ்சாயினும் இவ் வொழுங்கையே பின்பற்றுகிறது.

மடிப்புகள் நீங்க நீங்க கருவின் வடிவம் முதிர்ச்சிபெறுதல், நமசிவய என்ற எழுத்துக்களை மக்கள் வடிவத்தில் அமைக்கின்ற இந்திய உண்மைநூலின் ஒழுங்கோடு ஒன்றியிருத்தல் கருதத்தக்கது. இப்பொழுது நமசிவய என்ற

எழுத்துக்களை நான் மந்திரமாக எடுத்தாராயவில்லை. இயற்கையில் நாம் காண்கின்ற வடிவின் வளர்ச்சிமுறைக்கொரு குறியீடாகவே அதைக் கொள்கின்றேன். இதிலிருந்து பருப்பொருளாராய்ச்சிசெய்யும் எல்லா அறிவியல் துறைகளை மாத்திரமேயன்றி நுண்பொருள் துறைகளையும் பெறலாம். சமூக அமைப்பு (Sociology) எனுந் துறையையும் அதிலிருந்து பெறலாம். பண்டைத் தமிழர்கள் மேற்கூறிய எழுத்துக்களை, இக்காலத்துக் கணக்கியலில் விரிந்த ஒருமுறையைச் சுருக்கிக் காட்ட ஆளப்படுகின்ற எழுத்துக்களைப்போல் (Formula) வழங்கியிருக்கின்றனர்கள். உலகிலுள்ள அறிவியிற்பகுதிகளை விளக்குகின்ற குறியீடாகப் பயன்படுவதே மந்திரத்தின் இயல்பாம். ந. ம. சி. வ. ய. என்னும் எழுத்துக்களை பஞ்சபூதக் குறியீடு என்று நான் கூறுகின்றேன். அரசியற் சிக்கனம் முதலியவற்றிற் காணப்படுகின்ற சிக்கல்களையும் இதனுதவி கொண்டு அவிழ்த்திடலாம். சமூக அமைப்பு என்பதை எடுத்துக்கொண்டு அதில் ஏன் நாமிப்பொழுது இடையூறுகளுக்காளானோம் என்பதை விளக்கிக் காட்டுகின்றேன். இத்துறையில் நாம் பஞ்ச பூதக் குறியீட்டின் ஒழுங்கைச் சிதைத்துவிட்டோம். ந. ம. சி. வ. ய. என்றிருக்கவேண்டிய ஒழுங்கு தவறி சி. வ. ய. ந ம. என்று நின்றிடுமாயின், குறியீட்டின் மாறுதலுக்கேற்ப, குறிக்கப்பட்ட துறையிலும் நிலை மாறும். இங்ஙனந் தோன்றிய மாறுதல் குறியீட்டிலுள்ள ந. ம. சி. வ. ய. என்ற ஒழுங்கு திரும்பி வருமளவும் நிகழ்ந்து கொண்டே செல்லும்.

பண்டைத் தமிழர்கள் வகுத்த பஞ்சபூதக் குறியீட்டிலடங்கிய நனியகன்ற அறிவுக் களஞ்சியத்தில் இஃதொரு இம்மியேயாகும். அக்குறியீடு வடிவ வளர்ச்சியை மாத்திரமேயன்றி விண்ணிலும் மண்ணிலுமுள்ள எல்லாவற்றையும் சுருக்கிக் காட்டுகின்றது. கட்டிட அமைப்பியல் கருத்தாயினும், அறிவியற் கருத்தாயினும் எல்லாம் இக்குறியீட்டிலடங்கும். கட்டிட அமைப்பை எடுத்துக்கொள்வோம். நாமொரு வீடு கட்டும்பொழுது இக்குறியீட்டின் எல்லாப் பகுதிகளையும் எடுத்தாள்கின்றோம். ஒரு மனையை வகுக்குங்கால் அது நெடுநாள் உறுதியாய் நிற்கவேண்டுமென்பது நம்முடைய நோக்கமாகின்றது. உறுதியாய் ஒரு மனை நிற்கவேண்டுமாயின், அது, பஞ்சபூதக் குறியீட்டின் ஒழுங்கைப் பற்றியமைக்கப்பட வேண்டுமென்று தமிழர்களுடைய மனையடி சாஸ்திரங் கூறுகின்றது. குறியீட்டின் ஒழுங்கு யாண்டாவது பிறழுமாயின், அதற்கேற்ப வீட்டின் உறுதி நிலையும் பழுது

படும். ஒரு வீட்டினுள்ள ஐம்பூதங்கள் யாவை? ஈண்டு வீடு கட்டுவதில் நாம் வகுப்பனவற்றினுள்ள ஐம்பூதங்களையே நாம் கருதவேண்டும். ஏனெனின், நெருப்பென்பது ஒரு பருப்பொருளன்று. பருப்பொருட்களின் ஒரு நிலையே நெருப்பாகின்றது. ஆனால், பிருதிவி என்பது பருப்பொருளாகும். ஆதலின், ஐம்பூதச் சார்புள்ள பொருட்களையே நாமெடுத்துக் கொள்ளல் வேண்டும். எங்ஙனமெனின், பிருதிவியின் தன்மை இறுக்கம்; இறுக்கமுடையவை பிருதிவியின் பாற்படும். அப்புவின் தன்மை புடைபெயர்ச்சியாகும். தேயுவின் தன்மை சூடாகும். ஒருவனுடைய புனையுமாற்றல் கொழுந்து விட்டெரிகின்றதென்று சொல்கின்றோம். (A man's imagination is on fire). இங்கே நெருப்பொன்றுமில்லை. ஆனால், ஆற்றல் உரத்துடன் வெளிப்படுவதை இவ்வாறு கூறுகின்றோம். வாயுவென்று சொல்லுங்கால் வெறுங் காற்றை மாத்திரம் நினைத்தல் கூடாது. ஆனால், எல்லா விடங்களையும் நிரப்புகின்ற தன்மையே வாயுவெனப்படுகின்றது. ஆகாசமென்பது நீக்கொணாதது. காற்றை நாம் நீக்கக்கூடும். ஆனால் விண்ணி என்ற ஈதரை (ஆகாசத்தை) நீக்குதல் கூடாது. நாம் எவ்வளவு முயன்றாலும் அஃது இருந்தே தீரும். ஈண்டுக் கூறிய இத்தன்மைகளே பஞ்சபூதங்களுக்கு அடையாளமா யெடுத்துக்கொண்ட ஐந்தெழுத்துக்களால் குறிக்கப்படுவன.

இத்தன்மைகள் ஒரு வீட்டின் அமைப்பில் எங்ஙனம் இடம் பெறுகின்றன என்பதைக் கவனிப்போம். ஒரு வீட்டின் அடிப்படை இறுகிய தன்மையுடைய பிருதிவியால் அமையவேண்டும். ஏனெனின் அடிப்படை வன்மையை அவாவுகின்றது. இதற்கடுத்தபடியில் அப்பு வரவேண்டும். இதற்கேற்ப, அடிப்படைக்குமேல் சாலகங்கள் அமையப் பெறுகின்றன. அடிப்படையிற் சாலகம் அமைப்பாருண்டு கொல்! சாலகத்திற்கு மேலும் கூரைக்குக் கீழும் உள்ள மூன்றாம் இடத்தில் தேயு இடம்பெறுகின்றது. தேயுவின் இடம் சாலகத்தின் அருகிலும் கூரையினருகிலு மிருத்தல் கூடாது. இதற்கு மேல் வாயுவின் இடம் வருகின்றது. வாயுவின் இடம் சாளரங்களாற் குறிப்பிடப்படுகின்றது. சாளரங்களமைக்கப்படுவது தரை மட்டத்தின் மேலும் ஆகாயத்திற்குக் கீழுமாம்.

எத்துறையை எடுத்து ஆராயினும் உறுதியுள்ளவற்றில் எல்லாம் பிருதிவி ஆள்கின்றதைப் பார்க்கலாம். அதற்கடுத்தபடியில் அப்புவும், அதற்கடுத்தபடியில் தேயுவும், இங்ஙனமே மற்றிரண்டும் இடங்கொள்கின்றன.

இப்பொழுது நமது பஞ்சபூதக் குறியீடு ஓர் ஈருருளியில் எங்ஙனம் அமைகின்றதென்பதைப் பார்ப்போம். ஈருருளியில் அதன் சட்டம் பிருதிவித் தன்மையுடையதென்பதை எவரும் ஒத்துக்கொள்வர். இதில், நீர் நெருப்பு ஆகியவற்றின் தன்மை வெளிப்பட்டு நிற்கவில்லை.

உருளைகள் சுற்றிச் செல்வதால் அவை, புடைபெயர்ச்சியுடைய நீரின் தன்மையைப் பெறுகின்றன. ஆதலின், இங்கே உருளைகள் அப்புவின் பாற்படும். உருளைகள் சுழல்கின்றதன் பயனாக நெருப்பின் தன்மை யுண்டாகின்றது. இந்த ஒழுங்கு சரியாயிருக்கும் மட்டும் ஈருருளி செவ்வனே உருண்டு செல்கின்றது. இந்த ஒழுங்கைச் சற்றுப் பிறழச் செய்வோமாயின், உருளி கீழே விழ அதன் சட்டம் நிலத்திற் படிந்து உருளைகள் காற்றிற் சுழல்கின்றன. இவ்வுண்மையை எல்லா இயந்திர அமைப்புகளிலுங் காணலாம். ஒவ்வொரு இயந்திரத்திலிருந்தும் பெறக்கூடிய ஆற்றல் வெளிவரும் வண்ணம் பஞ்சபூதக் குறியீடு பற்பல வகையில் மாற்றி ஆளப்படுகின்றது. பற்பல பகுதிகளையுடைய ஒரு கப்பலும் இவ்வொழுங்கிற்குட்பட்டதே. அதன் புடைபெயருந் தன்மையும் மிதக்குந் தன்மையும் வேறு பண்புகளும் நன்றாக ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வொழுங்கு சிறிது தவறிடின் இன்னல் விளைகின்றது.

ஈண்டு யான் கூறியவை பயனுடையனவாகவோ, பயனில்லாதனவாகவோ இருக்கலாம். ஆனால், இத்துறையில் ஆராய்ச்சி நிகழ்த்துகின்றவருக்கு ஊக்கமளிக்கும் ஒரு கருத்தாய் இஃது இருக்குமென்று நினைக்கின்றேன். தொல்காப்பிய மரபியலில் ந, ம, சி, வ, ய என்ற முறை முற்றிலும் ஆளப்படுகின்றது. சமுதாய அமைப்புங்கூட இம்முறையைப் பின்பற்றியே எழுதப்பட்டிருக்கின்றது. மரபியலின் பகுதிகள் உறுதியை நோக்கியே (நிலை பெற்ற தன்மை) ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. திருவள்ளுவரும் ஔவையும் செய்த அறநூல்கள் அவைகள் தோன்றிய நாட்டில் மாத்திரமேயன்றி அவைகள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் வேறு நாடுகளிலும் நிலையானவையாய் விளங்குகின்றன. அவைகளின் உறுதி நிலைக்குக் காரணம் பஞ்சபூதக் குறியீட்டுக்கு ஒப்ப அவை இயற்றப்பட்டிருத்தலே யாம்.

(முற்றிற்று)

# மொழி பெயர்ப்பு-Translation

## குறுந்தொகை

(ஆங்கில மொழிபெயர்ப்பு)

திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் எம். எ., பி. எல்.

### 4. நெய்தல்

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் நெஞ்சே. —காமஞ்சேர் குளத்தார்

Pained is my heart, ay, pained is my heart and pained yet again is my heart, and my eyes are brimful of hot tears that scald the eyelids, at the departure of my lover who was inclined to abide with me!

—**Kamam-ser-kulathar.**

### 5. நெய்தல்

அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே. —நரிவெரூஉத் தலையார்,

Is this the thing called love Oh friend, that sleep does not visit those collyrium-fed eyes of thine resembling the many-petalled lotus, ever since he departed the Lord of the quiet sea-port where the broken waves flinging forth the spray drench the tender leaves of the *Punnai* where herons sleep and abide.

—**Nari-veru-Thalai-yar.**

also மின்னிலை-shining leaves.

### 6. நெய்தல்

நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே. —பதுமனார்.

Midnight hums with the sound '*Nal*'; speechless- and subdued by sleep lie the low among mankind: like- wise the high ones, of this loving wide-spread world. Alas, alas! I alone am sleepless! —**Padmanar.**

# செய்திகளும் குறிப்புகளும்:
# News and Notes

## தூத்துக்குடி, சைவசித்தாந்த சபை
## 52-ஆம் ஆண்டுவிழா

1935-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 28, 29-ஆம் நாட்களில் தூத்துக்குடியில் சைவசித்தாந்த சபை 52-ஆம் ஆண்டு விழா திருவாளர் T. சிவராம சேதுப்பிள்ளை M.A.,B.L., F.C.S., அவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. உயர்சைவத் திருவாளர் மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் சபையினைத் திறந்துவைத்தார்கள்! அறிக்கை முதலியன படித்தபின் திருத் தலைவரவர்கள் முன்னுரையாக அரை மணி நேரம் தமிழும் சைவமும் என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். பின்னர்த் திருவாளர்கள் சாத்தூர் T. S. கந்தசாமி முதலியாரவர்களும், தஞ்சை பா. சிவகுருநாத பிள்ளை அவர்களும், லாலுகுடி வித்வான் அ. மு. சரவண முதலியாரவர்களும் நாகர்கோவில் ஆறுமுகம் பிள்ளை அவர்களும், பறங்கிப் பேட்டை வித்வான் பெரியசாமிப் பிள்ளையவர்களும், அண்ணாமலைநகர் R. P. சேதுப்பிள்ளை அவர்களும் இரண்டுநாட்களிலும் அவரவர்கள் எடுத்துக் கொண்ட பொருள்களைப்பற்றி மிகவும் அழகுபடக் குறித்த நேரத்துக்குள் பேசினார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆடவரும், நூற்றுக்கு மேற்பட்ட பெண்டிரும் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இரண்டாம் நாட் காலையில் சைவஇளைஞர் மகாநாடும் மூன்றும் நாள் மாலையில் சைவமங்கையர் மகாநாடும் முறையே சிறப்புற நடைபெற்றன. சைவ இளைஞர் மகாநாட்டில் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் அருமைத் திருமகனார் ஞானசம்பந்தம் என்னும் மாணவர் **'காரைக்காலம்மையார்'** என்னும் பொருள்பற்றிப் பேசியது இளைஞர்கட்கும் முதியவர்கட்கும் ஒருங்கே மகிழ்வையும் ஊக்கத்தையும் அளித்தது. இரண்டாம் நாள் விழா முடிவில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

This Conference is of opinion:—

(a) that Tamil lecturers in Colleges should be given the status and salary of the lecturers on other subjects.

கலாசாலைகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் விரிவுரையாளர் (lecturers)க்கு மற்றைய பாடங்களைக் கற்பிக்கும் விரிவுரையாளருக்குரிய சம்பளமும் பதவியும் கொடுக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு வற்புறுத்துகின்றது.

(b) that provision for higher studies in Tamil be made by instituting Honours Course in the Madras University.

சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ் மொழி வளர்ச்சியடைவதற்கு இன்றியமையாத பீ. ஏ. ஆனர்ஸ் வகுப்பு வைத்து நடத்த வேண்டுமென்று சென்னைச் சர்வகலாசாலையை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(c) that the Vernacular be adopted as the medium of instruction in schools and colleges for all subjects other than English.

கல்லூரிகளில் ஆங்கில பாடமொழிய ஏனைய பாடங்கள் யாவும் நாட்டு மொழியின் வாயிலாகப் பயிற்றப்படவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

——

270

## திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள்

## நான்காம் ஆண்டுவிழா

1936-ஆம் ஆண்டு ஜனவரித்திங்கள் 8-ஆம் நாள் 5-மணி முதல் 8-மணிவரை சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மேடையில் திவான் பகதூர் டாக்டர் C. நடேச முதலியாரவர்கள் தலைமையில் சென்னை வித்வான் பா. கண்ணப்ப முதலியாரவர்கள் 'தமிழ்ப் பெருமை' என்பது பற்றியும், சென்னை நகராண்மைக்கழகக் கல்வித் தலைவர் திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் 'திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் வரலாறும் நூலராய்ச்சியும்' என்னும் பொருள் பற்றியும் மிகவும் திறம்படவும், கேட்பவருக்கு மகிழ்வும் ஊக்கமும் உண்டாமாறும் பேசினார்கள். பின் திருவாளர் செ. தெ. நாயகம் அவர்கள் திரு. நாயக்கரவர்களைப்பற்றித் தமக்குத் தெரிந்த இரண்டொரு சிறந்த குறிப்புக்களை நன்கு விளக்கிப் பேசினார்கள். பின் தலைவரவர்கள் முடிப்புரையாகத் திரு. நாயக்கரவர்களின் வியத்தகு புலமையினையும் ஆற்றலையும் பற்றிப் பேசினார்கள். பின் திருவாளர் வ. சுப்பையாபிள்ளை அவர்கள் திரு. நாயக்கரவர்களின் அருமைப் புதல்வர் திரு. முருகமாணிக்கம் என்பவர் கண்டுபிடித்திருக்கிற புதிய பொறிகளைப் பற்றியும், புதல்விகளின் கல்விப் புலமையினைப் பற்றியும் பேசித் திருத்தலைவரவர்கட்கும் சொற்பொழிவாளர்கட்கும் வணக்கவுரை கூறக் கூட்டம் கலைந்தது.

கூட்டத்துக்கு வந்திருந்த அன்பர்கட்குச் சிற்றுண்டியும் வழங்கப்பெற்றது.

---


## புதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| திருப்புகழ் (1361 பாடல்கள்) | ரூ. | 3 | 0 |
| பெருங்கதை உரை 2-ம் பதிப்பு | | 7 | 0 |
| புறநானூறு உரை 3-ம் பதிப்பு | | 5 | 0 |
| சைவசித்தாந்த ஞானபோதம் (3-ம் பதிப்பு) மறைமலையடிகள் | | 3 | 0 |
| சாமவேதம் (மொழிபெயர்ப்பு) | | 1 | 8 |

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

272



தமிழ்ப் பெரியார்
கா. நமச்சிவாய முதலியார்.